# செம்மொழி

திருவள்ளுவர் ஆண்டு 2055 தை - மார்கழி (2024 சனவரி - திசம்பர்)

**செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனச் செய்திமடல் - 18 | வெளியீடு: ஜூன் 2026**



**செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனச் செய்திமடல் - 18**

திருவள்ளுவர் ஆண்டு 2055 தை – மார்கழி (2024 சனவரி – திசம்பர்) | வெளியீடு: ஜூன் 2026

செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம் இந்திய அரசின் கல்வி அமைச்சகத்தின் கீழ் இயங்கும் தன்னாட்சி நிறுவனமாகும். இந்நிறுவனம் செம்மொழித் தமிழை மேம்படுத்தும் வகையில் தமிழின் தொன்மையையும் தனித் தன்மையையும் கி.பி.6ஆம் நூற்றாண்டுக்கு முந்தைய காலத்தை அடிப்படையாகக்கொண்டு 12 புலங்களினூடாகக் [1.இலக்கியப் புலம், 2.மொழியியல் புலம், 3.மொழிபெயர்ப்புப் புலம், 4.அகராதியியல் புலம், 5.மொழிகள் பள்ளி, மொழிக்கல்விப் புலம், 6.வரலாறு, சமூகவியல், மாந்தவியல் புலம், 7.தொல்லியல் புலம், 8.சுவடியியல் புலம், 9.கல்வெட்டியல், நாணயவியல் புலம், 10.கலை, கட்டடவியல் புலம், 11.அயலகத் தமிழ்ப் புலம், 12.மொழித் தொழில்நுட்பப் புலம்] கீழ்க்காணும் முதன்மைத் திட்டப் பணிகளை மேற்கொண்டு வருகிறது.

1. 41 பழந்தமிழ் நூல்களைச் செம்பதிப்பாக வெளியிடல்
2. பழந்தமிழ் நூல்களை ஆங்கிலத்திலும் ஐரோப்பிய மொழிகளிலும் பிற இந்திய மொழிகளிலும் மொழிபெயர்த்தல்
3. இணையவழியில் செம்மொழித் தமிழ் கற்பித்தல்
4. வரலாற்றுமுறைத் தமிழ் இலக்கணம் உருவாக்கல்
5. வரலாற்று அடிப்படையிலும் இக்கால நோக்கிலும் தமிழ் வழக்காற்றுச் சொற்களைத் தொகுத்தல்
6. செம்மொழித் தமிழ் நூல்களுக்கான தரவகம் உருவாக்கல்
7. பழந்தமிழ் ஆய்வுக்கான மின் நூலகம் நிறுவுதல்
8. இந்தியாவை ஒரு மொழிப் புலமாக ஆய்வுசெய்தல்
9. செம்மொழித் தமிழின் பல்துறை ஆய்வுகளை மேம்படுத்தல்.

## பொருள் நிரல்

1. வாழ்த்துரை........1
2. முதன்மை ஆசிரியர் உரை........2
3. பிஎம் இ–வித்யா சிஜசிடி தமிழ்த் தொலைக்காட்சி........3
4. பாரத மொழிகளின் திருவிழா........6
5. கூட்டங்கள்........13
6. பயிலரங்குகள்........16
7. மருத்துவ முகாம்........32
8. கருத்தரங்குகள்........35
9. கலைஞர் மு. கருணாநிதி செம்மொழித் தமிழ் விருது........37
10. ஆய்வு உதவித்தொகைகள்........37
11. அலைபேசிச் செயலிகள்........38
12. புத்தகக் காட்சிகள்........44
13. நிறுவன விழாக்கள்........45
14. 2024ஆம் ஆண்டில் வெளியிடப்பெற்ற நூல்கள்........52

## ஆசிரியர் குழு

முதன்மை ஆசிரியர்

**பேராசிரியர் இரா. சந்திரசேகரன்**

ஆசிரியர்

**முனைவர் ந. பெரியசாமி**

வடிவமைப்பு

**திரு. க. சங்கர்**

सत्यमेव जयते

**செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம்**

(தன்னாட்சி நிறுவனம், கல்வி அமைச்சகம், இந்திய அரசு)

செம்மொழிச் சாலை, பெரும்பாக்கம், சென்னை – 600 100.

தொலைபேசி: 044 – 22540125 | மின்னஞ்சல்: chemmozhi@cict.in | இணையம்: www.cict.in



**பேராசிரியர் மருத்துவர் சுதா சேஷய்யன்**
துணைத்தலைவர்
செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம், சென்னை.

# வாழ்த்துரை

செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம் தமிழ்ச் செவ்விலக்கியச் செம்பதிப்பு, தமிழ்ச் செவ்விலக்கிய மொழிபெயர்ப்பு, இணையவழிக் கல்வி, செம்மொழித் தரவகம், இணைச்சொற்களஞ்சியம், ஓலைச்சுவடிகள் மின்னாக்கம், செவ்விலக்கியங்களின் முதற்பதிப்புகள் மின்னாக்கம், செம்மொழித் தமிழ் மின்நூலகம், ஆய்வு நூல்கள், அகராதிகள், இந்திய அறிவு மரபுகள் திட்டம் ஆகிய பணிகளை மேற்கொண்டு வருகிறது. இதுமட்டுமல்லாமல் பேராசிரியர்களுக்கும் ஆய்வாளர்களுக்கும் பயனளிக்கும் வகையில் பயிலரங்குகள், கருத்தரங்குகள், புத்தொளிப் பயிற்சி வகுப்புகள் போன்றவையும் நடத்தப்பெற்று வருகின்றன. செம்மொழி வலையொளியில் தமிழ்ச் செவ்விலக்கிய ஆய்வுரைகள்பதிவேற்றம்செய்யப்பட்டுள்ளன. செவ்விலக்கியங்களுக்கான அலைபேசிச் செயலிகள் உருவாக்கப்பட்டுள்ளன. தமிழ் மொழியின் பெருமைகளை எடுத்தியம்பும் நோக்கில் ‘பிஎம் இ-வித்யா சிஜசிடி தமிழ்த் தொலைக்காட்சி’ தொடங்கப்பட்டுள்ளது.

தமிழ்ச் செவ்விலக்கியங்களை உலகெங்கிலும் கொண்டுசேர்க்கும் நோக்கில் நிறுவனச் செயல்பாடுகள் அமைந்துள்ளது சிறப்பிற்குரியது. தொல்காப்பியம், திருக்குறள், மணிமேகலை ஆகிய நூல்கள் உலக மொழிகள் பலவற்றிலும் மொழிபெயர்க்கப்பட்டுள்ளன. மேலும், செம்மொழி நிறுவனமும் பாரத மொழிகளின் குழுவும் இணைந்து ‘கல்வி நிறுவனங்களில் திருக்குறளின் விழுமியங்களைப் பரப்புதல்’ என்னும் திட்டத்தைச் செயற்படுத்திவருவது வரவேற்புக்குரியது.

தமிழ் மொழி வரலாற்றையும் சிறப்புகளையும் பிற மாநில மாணவர்களும் அறிந்துகொள்ளும் வகையில் நிறுவனத்தில் பல்வேறு நிகழ்வுகள் தொடர்ந்து நடைபெற்று வருவது மிகவும் பாராட்டுதற்குரியது. நிறுவனத்தின் பன்முகச் செயல்பாடுகளை உள்ளடக்கியதாக இந்தப் பதினெட்டாவது செய்தி மடல் புதுப்பொலிவுடன் வெளிவரக்கூடிய இத்தருணத்தில் நிறுவன இயக்குநர், பதிவாளர் மற்றும் இம்மடலாக்கக் குழுவினருக்கும், நிறுவனப் பணியாளர்களுக்கும் எனது மனமார்ந்த வாழ்த்துகளைத் தெரிவித்துக்கொள்கிறேன்.



**பேராசிரியர் இரா. சந்திரசேகரன்**
இயக்குநர்
செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம், சென்னை

# முதன்மை ஆசிரியர் உரை

செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம் தமிழ் மொழியின் இலக்கண, இலக்கிய வளங்களை உலக அரங்கில் கொண்டு சேர்க்கும் உயரிய பணியை மேற்கொண்டு வருகிறது. இந்தியாவில் தமிழ் மொழிக் கல்விக்கான முதல் தொலைக்காட்சியாகப் ‘பிஎம் இ-வித்யா சிஐசிடி தமிழ்த் தொலைக்காட்சி’ மாண்புமிகு மத்தியக் கல்வி அமைச்சர் திரு. தர்மேந்திர பிரதான் அவர்களால் 29.07.2024 அன்று தொடங்கி வைக்கப்பட்டது. உலகெங்கிலும் உள்ள மக்கள் தமிழ் மொழி, கலைகள், இலக்கியம், பண்பாடு, கல்வெட்டுகள், சித்த மருத்துவம், யோகா போன்ற அரிய வகைமைகளை 24 மணிநேரமும் இணையவழி நேரலையாகக் கற்றுணர இத்தொலைக்காட்சி பெரும் இணைப்புப்பாலமாகத் திகழ்கிறது. இத்தொலைக்காட்சியின் எண்ணிம உள்ளடக்கங்களை உருவாக்குவதற்காகத் தேசியக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சிக் குழுமத்தின் ஒரு பிரிவான மத்தியக் கல்வியியல் தொழில்நுட்ப நிறுவனத்துடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்திடப்பட்டுப் பணிகள் இடையறாது நடந்து வருகின்றன.

பாரத மொழிகளின் திருவிழாவின் ஒரு பகுதியாக, ‘மொழிகள் பல; உணர்வு ஒன்றே’ என்ற உயரிய நோக்கத்துடன் பள்ளி, கல்லூரி மாணவர்களுக்கான கட்டுரை, கவிதைப் போட்டிகளை நிறுவனம் நடத்தியது. இப்போட்டிகளில் கலந்துகொண்டு மாணவர்கள் ஆற்றிய பங்களிப்பு, இளைய தலைமுறையினரின் தமிழ்ப் பற்றிற்குச் சான்றாகும். தொடர் ஆய்வுப் பணிகளும் பயிலரங்குகளும் கருத்தரங்குகளும் இணையவழிப் பாடத்திட்ட உருவாக்கக் கூட்டங்களும் செம்மையாக நடத்தப்பட்டுள்ளன. மேலும், விஸ்வபாரதி மத்தியப் பல்கலைக்கழக மாணவர்களுக்கான தமிழ்ச் செவ்விலக்கிய அறிமுகப் பயிலரங்கம், மக்கள்தொகைக் கணக்கெடுப்பு அலுவலர்களுக்கு அடிப்படைத் தமிழ் கற்பித்தல் போன்ற நிகழ்வுகள் மூலம் பிற மாநிலத்தவருக்கும் தமிழைத் தடையின்றிக் கொண்டு சேர்க்கும் பணியை நிறுவனம் மேற்கொண்டு வருகிறது.

தமிழ் மொழியை நவீனத் தொழில்நுட்பத்தின் துணையோடு அடுத்த தலைமுறைக்குக் கொண்டுசெல்லும் இப்பயணத்தில் செம்மொழித் தமிழ் ஒலி நூல்கள், திருக்குறள் முற்றோதல், பரிபாடல் முற்றோதல், பத்துப்பாட்டு முற்றோதல், மணிமேகலை ஆங்கில மொழிபெயர்ப்பு, நானாற்பது ஆங்கில மொழிபெயர்ப்பு ஆகிய அலைபேசிச் செயலிகள் உருவாக்கப்பட்டுள்ளன. செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம் 2024ஆம் ஆண்டில் ஆற்றிய தமிழ்ப் பணிகளையும் நிறுவனத்தில் நடைபெற்ற அரிய நிகழ்வுகளையும் தாங்கி, இப்பதினெட்டாவது செம்மொழிச் செய்திமடல் வெளிவருகிறது. இச்செய்திமடலின் ஆசிரியர் முனைவர் ந. பெரியசாமிக்கும் வடிவமைப்பாளர் திரு. க. சங்கருக்கும் எனது வாழ்த்துகளைத் தெரிவித்து மகிழ்கிறேன்.




# பிஎம் இ-வித்யா
## சிஐசிடி தமிழ்த் தொலைக்காட்சி
## (PM e-Vidya CICT Tamil TV)

தேசியக் கல்விக் கொள்கையின் நான்காம் ஆண்டு நிறைவை நினைவுகூரும் வகையில் ‘அகில பாரதக் கல்விச் சங்கமம் – 2024’ என்னும் நிகழ்ச்சி 29.07.2024 அன்று புதுதில்லியிலுள்ள மானேக்ஷா மையத்தில் நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் உலகின் பழமையான செம்மொழித் தமிழ் மொழியினைக் கற்பதை எளிதாக்குவதற்காகப் பிஎம் இ-வித்யா சிஐசிடி தமிழ்த் தொலைக்காட்சி தொடங்கப்பட்டது.

இத்தொலைக்காட்சியை மாண்புமிகு மத்தியக் கல்வி அமைச்சர் திரு. தர்மேந்திர பிரதான் அவர்கள் தொடங்கி வைத்தார். மாண்புமிகு மத்தியக் கல்வித்துறை இணை அமைச்சர் முனைவர் சுகந்த மஜூம்தார், மாண்புமிகு மத்தியத் திறன்மேம்பாடு மற்றும் தொழில்முனைவோர் துறை இணை அமைச்சர் திரு. ஜெயந்த் சௌத்ரி ஆகியோர் இந்நிகழ்ச்சியில் முன்னிலை வகித்தனர்.

இத்தொலைக்காட்சி நம் நாட்டில் இருமொழி மற்றும் பன்மொழித் தன்மையை ஊக்குவிப்பதையும் தேசியக் கல்விக் கொள்கை 2020இன் இலக்குகளை அடைவதையும் தமிழ் மொழி, இலக்கியம், இசை, நாட்டியம், பண்பாடு, கலை முதலியவற்றைப் பாதுகாப்பதையும் பரப்புவதையும் நோக்கமாகக் கொண்டு தொடங்கப்பட்டுள்ளது.

மொழி கற்றல், திருக்குறள் கதைகள், தமிழ் இலக்கியம், கலை, பண்பாடு, கோயில்கள், சித்த மருத்துவம், வர்மம், யோகம், மரபுசார் உணவுகள், வரலாற்று நினைவிடங்கள், தமிழக ஆளுமைகள், கல்வெட்டுகள், நீர் மேலாண்மை ஆகிய வகைமைகளில் எண்ணிம உள்ளடக்கத்தைக் கொண்டு இத்தொலைக்காட்சி ஒளிபரப்பாகின்றது.

இந்தியாவில் மொழிக்கல்விக்காகத் தொடங்கப்பட்ட முதல் தொலைக்காட்சி இதுவேயாகும். மேலும் இத்தொலைக்காட்சி வலையொளியிலும் 24 மணிநேரமும் நேரலையாக ஒளிபரப்பாகின்றது.






## மத்தியக் கல்வியியல் தொழில்நுட்ப நிறுவனத்துடன் புரிந்துணர்வு ஒப்பந்தம்

இந்திய அரசின் மத்தியக் கல்வி அமைச்சகம் தமிழ் மொழிக்கென்று பிஎம் இ-வித்யா சிஐசிடி தமிழ்த் தொலைக்காட்சியை உருவாக்கியுள்ளது. செம்மொழித் தமிழ் இலக்கியங்களை அறிந்துகொள்ளல், தமிழ் மொழியினைக் கற்பித்தல், தமிழ்ப் பண்பாடு, கலை உள்ளிட்டவற்றைப் பாதுகாத்தல், பரப்புதல் ஆகியவற்றை நோக்கமாகக் கொண்டு இத்தொலைக்காட்சி தொடங்கப்பட்டுள்ளது. செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம் 29.07.2024 அன்று பிஎம் இ-வித்யா தொலைக்காட்சியின் தமிழ்ச் சேனல் 34ஐ ஒளிபரப்புவதற்காகத் தேசியக் கல்வியியல்

ஆராய்ச்சி மற்றும் பயிற்சிக் குழுமத்தின் (NCERT) ஒரு பிரிவான மத்தியக் கல்வியியல் தொழில்நுட்ப நிறுவனத்துடன் (CIET) புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டது. இந்நிகழ்வில் செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவன இயக்குநர் பேராசிரியர் இரா. சந்திரசேகரன், பதிவாளர் முனைவர் ரெ. புவனேஸ்வரி, தேசியக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சிக் குழுமத்தின் இயக்குநர், இணை இயக்குநர், மத்தியக் கல்வியியல் தொழில்நுட்ப நிறுவன இயக்குநர் ஆகியோர் கலந்துகொண்டனர்.



# காந்திகிராம கிராமிய நிகர்நிலைப் பல்கலைக்கழகத்துடன் புரிந்துணர்வு ஒப்பந்தம்





இந்திய அரசின் மத்தியக் கல்வி அமைச்சகம் தமிழ் மொழிக்கென்று பிஎம் இ-வித்யா சிஜசிடி தமிழ்த் தொலைக்காட்சியை உருவாக்கியுள்ளது. செம்மொழித் தமிழ் இலக்கியங்களை அறிந்துகொள்ளல், தமிழ் மொழியினைக் கற்பித்தல், தமிழ்ப் பண்பாடு, கலை உள்ளிட்டவற்றைப் பாதுகாத்தல், பரப்புதல் ஆகியவற்றை நோக்கமாகக் கொண்டு இத்தொலைக்காட்சி தொடங்கப்பட்டுள்ளது. இத்தொலைக்காட்சிக்காக நாட்டுப்புறவியல் தொடர்பானகாணொளிகளைஉருவாக்குவதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனத்திற்கும் திண்டுக்கல் காந்திகிராம கிராமிய நிகர்நிலைப் பல்கலைக்கழகத்திற்கும் இடையே உருவாக்கப்பட்டது. இப்புரிந்துணர்வு ஒப்பந்த நிகழ்ச்சி செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனத்தில் 12.09.2024 அன்று நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனஇயக்குநர்பேராசிரியர்இரா.சந்திரசேகரன், பதிவாளர் முனைவர் ரெ. புவனேஸ்வரி, இளநிலை ஆராய்ச்சி அலுவலர்கள் முனைவர் த. சரவணன், முனைவர் அ. ஆரோக்கியதாசு, நிரலாளர்கள் திரு. சு. கார்த்திகேயன், முனைவர் இரா. அகிலன், காந்திகிராம கிராமிய நிகர்நிலைப் பல்கலைக்கழகத் தமிழ், இந்திய மொழிகள் மற்றும் கிராமியக் கலைகள் புலப் பேராசிரியர் ஒ. முத்தையா, முனைவர் காந்தரே சந்து லக்ஸ்மண், முனைவர் டி. டேவிட் ஜெயராஜ் ஃப்ராங்க்ளின் ஆகியோர் கலந்துகொண்டனர்.



## துணைத்தலைவர் பொறுப்பேற்பு

செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனத்தின் துணைத்தலைவராகப் பேராசிரியர் மருத்துவர் சுதா சேஷய்யன் அவர்கள் 20.09.2024 அன்று பொறுப்பேற்றுக் கொண்டார். அவருக்கு நிறுவன இயக்குநர் பேரா. இரா. சந்திரசேகரன் பொன்னாடையும், பதிவாளர் முனைவர் ரெ. புவனேஸ்வரி பூங்கொத்தும் அளித்து வாழ்த்து தெரிவித்தனர். இந்நிகழ்வில் நிறுவன நிதி அலுவலர் திரு. ஆ. குமரேசன், நிறுவனப் பணியாளர்கள் அனைவரும் கலந்துகொண்டனர்.

## எஸ்.ஆர்.எம். அறிவியல் மற்றும் தொழில்நுட்பக் கல்வி நிறுவனத்துடன் புரிந்துணர்வு ஒப்பந்தம்

இந்திய அரசின் மத்தியக் கல்வி அமைச்சகம் தமிழ் மொழிக்கென்று பிஎம் இ-வித்யா சிஐசிடி தமிழ்த் தொலைக்காட்சியை உருவாக்கியுள்ளது. செம்மொழித் தமிழ் இலக்கியங்களை அறிந்துகொள்ளல், தமிழ் மொழியினைக் கற்பித்தல், தமிழ்ப் பண்பாடு, கலை உள்ளிட்டவற்றைப்பாதுகாத்தல், பரப்புதல் ஆகியவற்றை நோக்கமாகக் கொண்டு இத்தொலைக்காட்சி தொடங்கப்பட்டுள்ளது. இத்தொலைக்காட்சிக்காகத் தமிழ் மொழியைக் கற்பித்தல் தொடர்பான காணொளிகளை உருவாக்குவதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனத்திற்கும் எஸ்.ஆர்.எம். அறிவியல் மற்றும் தொழில்நுட்பக் கல்வி நிறுவனத்திற்கும் இடையே உருவாக்கப்பட்டது. இப்புரிந்துணர்வு ஒப்பந்த நிகழ்ச்சி காட்டாங்குளத்தூரில் உள்ள எஸ்.ஆர்.எம். அறிவியல் மற்றும் தொழில்நுட்பக் கல்வி நிறுவனத்தில் 08.10.2024 அன்று நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவன இயக்குநர் பேராசிரியர் இரா. சந்திரசேகரன், பதிவாளர் முனைவர் ரெ. புவனேஸ்வரி, இளநிலை ஆராய்ச்சி அலுவலர்




முனைவர் த. சரவணன், நிரலாளர் முனைவர் இரா. அகிலன், எஸ்.ஆர்.எம். அறிவியல் மற்றும் தொழில்நுட்பக் கல்வி நிறுவன இணைத்துணைவேந்தர் பேராசிரியர் அ. வினய் குமார், எஸ்.ஆர்.எம். அறிவியல் மற்றும் தொழில்நுட்பக் கல்வி நிறுவனப் பதிவாளர் முனைவர் ச. பொன்னுசாமி, முனைவர் பா. ஜெய்கணேஷ், முனைவர் சாந்தி சித்ரா ஆகியோர் கலந்துகொண்டனர்.




இந்திய நாட்டையும் அதன் பெருமையையும் தலைமேற் கொண்டாடிய, தமிழ்த் தாயின் தவப்புதல்வராக விளங்கிய மகாகவி சுப்பிரமணிய பாரதியாரின் பிறந்த நாளான டிசம்பர் 11ஆம் நாளை 2022ஆம் ஆண்டு முதல் ‘பாரத மொழிகளின் நாள்’ என இந்திய அரசு கொண்டாடி வருகிறது. இந்த நாளை முன்னிட்டு ‘இந்திய மொழிகளின் வேற்றுமையில் ஒற்றுமை’யை நாட்டின் எதிர்கால இளைஞர்களின் இதயங்களில் ஆழமாக வேரூன்றச் செய்வதற்காக இந்திய அரசு பாரத மொழிகளின் திருவிழாவினைக் கொண்டாடி வருகிறது. இதனையே ‘பன்மொழியியம்’ என்பதாகப் புதிய கல்விக் கொள்கையிலும் நடுவணரசு ஊக்கப்படுத்தி நடைமுறைப்படுத்தியுள்ளது. ‘ஒரே பாரதம் உன்னத பாரதம்’ என்ற உயர்ந்த குறிக்கோளிற்கான புதுமுயற்சியாகப் ‘பாரத மொழிகளின் திருவிழா’வானது ‘‘மொழிகள் பல; உணர்வு ஒன்றே’’ என்ற முழக்கத்துடன் கொண்டாடப்படுகிறது.

தாய்மொழியைப் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தவும், ஊக்குவிக்கவும், மொழி – பண்பாட்டு மரபுகள் மற்றும் பன்முகத்தன்மை பற்றிய கூறுகளை அறிந்துகொள்ளவும், பல்வேறு மொழி பேசும் மக்களிடையே ஒற்றுமையை ஏற்படுத்தவும் மத்தியக் கல்வி அமைச்சகம் பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது. தேசத்தின் வளர்ச்சிக்கும் முன்னேற்றத்திற்கும் அவரவர் தாய்மொழியைப் பயன்படுத்துவதன் இன்றியமையாமையை நாட்டு மக்களுக்கு உணர்த்தவும், தாய்மொழியில் புலமைத் திறத்தை வளர்க்க வேண்டுமென்ற நோக்கிலும், பாரத மொழிகளின் திருவிழாவின் ஒரு பகுதியாகவும் செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம் பள்ளி, கல்லூரி மாணவர்களுக்கான கட்டுரை, கவிதைப் போட்டி குறித்த அறிவிப்பை 25.10.2024 அன்று வெளியிட்டது.

### பள்ளி, கல்லூரி மாணவர்களுக்கான கட்டுரைப் போட்டி

ஆறு முதல் ஒன்பதாம் வகுப்பு பயிலும் பள்ளி மாணவர்கள் ‘பாருக்குள்ளே நல்ல நாடு, நம் பாரத நாடு’ என்ற தலைப்பிலும், பத்து முதல் பன்னிரண்டாம் வகுப்பு பயிலும் மாணவர்கள் ‘தீதும் நன்றும் பிறர்தர வாரா’ என்ற தலைப்பிலும், இளங்கலை, முதுகலை பயிலும் கல்லூரி மாணவர்கள் ‘வள்ளுவர் உணர்த்தும் அறம்’ என்ற தலைப்பிலும் கட்டுரைகளை எழுதி, 23.11.2024ஆம் நாளுக்குள் நிறுவனத்திற்கு அனுப்பிவைக்குமாறு கேட்டுக்கொள்ளப்பெற்றது. தேர்ந்தெடுக்கப்படும் சிறந்த கட்டுரைக்கு ஒவ்வொரு பிரிவிலும் முதற்பரிசாக ஒருவருக்கு ரூபாய் முப்பதாயிரமும், இரண்டாம் பரிசாக ஒருவருக்கு ரூபாய் இருபதாயிரமும், மூன்றாம் பரிசாக ஒருவருக்கு ரூபாய் பத்தாயிரமும் வழங்க நிறுவனம் அறிவித்தது.

பள்ளி, கல்லூரி மாணவர்களிடமிருந்து கட்டுரைப் போட்டிக்காக வரப்பெற்ற கட்டுரைகளிலிருந்து பரிசுக்குரியவை தேர்ந்தெடுக்கப்பட்டன. பரிசுக்குரியவர்களின் விவரங்கள் கீழ்வருமாறு:

### பாருக்குள்ளே நல்ல நாடு, நம் பாரத நாடு

(பள்ளி மாணவர்கள் - ஆறு முதல் ஒன்பதாம் வகுப்பு)

**முதற்பரிசு:**

சி. மோகனப்பிரியா, ஒன்பதாம் வகுப்பு, அரசு மேனிலைப் பள்ளி, பழுவாஞ்சி, மருங்காபுரி வட்டம், திருச்சி மாவட்டம்.

**இரண்டாம் பரிசு:**

பா. சுவேதா, ஒன்பதாம் வகுப்பு, நோபல் மெட்ரிக் மேல்நிலைப் பள்ளி, பெரியவள்ளிக்குளம், விருதுநகர் மாவட்டம்.

**மூன்றாம் பரிசு:**

சி. ஜெயஸ்ரீ, ஒன்பதாம் வகுப்பு, அரசு மேனிலைப் பள்ளி, அம்புகோவில், கறம்பக்குடி, புதுக்கோட்டை மாவட்டம்.

## தீதும் நன்றும் பிறர்தர வாரா

(பத்து முதல் பன்னிரண்டாம் வகுப்பு)

**முதற்பரிசு:**

மு. பார்க்கவி, பதினொன்றாம் வகுப்பு, அரசு மாதிரி மேனிலைப் பள்ளி, வல்லம், தஞ்சாவூர் மாவட்டம்.

**இரண்டாம் பரிசு:**

மோ.பா. கோபிகா, பன்னிரண்டாம் வகுப்பு, அரசு மேனிலைப் பள்ளி, பி. மேட்டுப்பாளையம், பவானி வட்டம், ஈரோடு மாவட்டம்.

**மூன்றாம் பரிசு:**

கி. வினோஸ்ரீ, பத்தாம் வகுப்பு, விக்னேஷ்வரா வித்யாலயா மெட்ரிக் மேனிலைப் பள்ளி, பெருமாநல்லூர், திருப்பூர் மாவட்டம்.

## வள்ளுவர் உணர்த்தும் அறம்

(கல்லூரி மாணவர்கள்)

**முதற்பரிசு:**

ரா.சா. ஜனனி, முதுநிலை முதலாமாண்டு, இயற்பியல் துறை, பாரதியார் பல்கலைக்கழகம், கோயம்புத்தூர்.

**இரண்டாம் பரிசு:**

தி. ஸ்டிபானி ரொவினா, இளநிலை முதலாமாண்டு, கட்டடப் பொறியியல் துறை, பி.எஸ்.ஜி. தொழில்நுட்பக் கல்லூரி, கோயம்புத்தூர்.

**மூன்றாம் பரிசு:**

ஜா. ரத்னாவின்சி, இளநிலை இறுதியாண்டு, மின்னணுவியல் மற்றும் தகவல்தொடர்பு பொறியியல் துறை, எம்.ஏ.எம். பொறியியல் மற்றும் தொழில்நுட்பக் கல்லூரி, திருச்சி.

## கவிதைப் போட்டி

(பள்ளி, கல்லூரி மாணவர்கள்)

ஆறு முதல் ஒன்பதாம் வகுப்பு பயிலும் பள்ளி மாணவர்கள் ‘மெய்ப்பொருள்’ என்ற தலைப்பிலும், பத்து முதல் பன்னிரண்டாம் வகுப்பு பயிலும் மாணவர்கள் ‘செவிச்செல்வம்’ என்ற தலைப்பிலும், இளங்கலை, முதுகலை பயிலும் கல்லூரி மாணவர்கள் ‘பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்’ என்ற தலைப்பிலும் கவிதைகளை எழுதி, 23.11.2024ஆம் நாளுக்குள் நிறுவனத்திற்கு அனுப்பிவைக்குமாறு கேட்டுக்கொள்ளப்பெற்றது. தேர்ந்தெடுக்கப்படும் சிறந்த கவிதைக்கு ஒவ்வொரு பிரிவிலும் முதற்பரிசாக ஒருவருக்கு ரூபாய் முப்பதாயிரமும், இரண்டாம் பரிசாக ஒருவருக்கு ரூபாய் இருபதாயிரமும், மூன்றாம் பரிசாக ஒருவருக்கு ரூபாய் பத்தாயிரமும் வழங்க நிறுவனம் அறிவித்தது.

**பள்ளி, கல்லூரி மாணவர்களிடமிருந்து கவிதைப் போட்டிக்காக வரப்பெற்ற கவிதைகளிலிருந்து பரிசுக்குரியவை தேர்ந்தெடுக்கப்பட்டன. பரிசுக்குரியவர்களின் விவரங்கள் கீழ்வருமாறு:**

## மெய்ப்பொருள்

(பள்ளி மாணவர்கள் - ஆறு முதல் ஒன்பதாம் வகுப்பு)

**முதற்பரிசு:**

சி. கிரித்திக், ஏழாம் வகுப்பு, ஒய்ஆர்டிவி மெட்ரிக் மேனிலைப் பள்ளி, சிவகாசி, விருதுநகர் மாவட்டம்.

**இரண்டாம் பரிசு:**

வெ.கு. விவேகா, ஏழாம் வகுப்பு, பாரதி வித்யாபவன் மெட்ரிக் மேல்நிலைப் பள்ளி, திண்டல், ஈரோடு மாவட்டம்.

**மூன்றாம் பரிசு:**

அ. அபி, எட்டாம் வகுப்பு, ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளி, உப்புத்துறை, தேனி மாவட்டம்.

## செவிச்செல்வம்

(பத்து முதல் பன்னிரண்டாம் வகுப்பு)

**முதற்பரிசு:**

அ. சுபத்ரா, பன்னிரண்டாம் வகுப்பு, மகாராஜபுரம் நாகம்மாள் ராசய்யா பெண்கள் மேனிலைப் பள்ளி, ஸ்ரீவில்லிப்புத்தூர், விருதுநகர் மாவட்டம்.

**இரண்டாம் பரிசு:**

ரா. ஜீவன் பிரசாத், பதினொன்றாம் வகுப்பு, மாநில தகைசால் பள்ளி, சைதாப்பேட்டை, சென்னை மாவட்டம்.

**மூன்றாம் பரிசு:**

து. பிரதிபா, பத்தாம் வகுப்பு, பெட்ஃபோர்டு அகாடமி மெட்ரிக்குலேசன் மேனிலைப் பள்ளி, வேடசந்தூர் வட்டம், திண்டுக்கல் மாவட்டம்.

## பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்

(கல்லூரி மாணவர்கள்)

**முதற்பரிசு:**

சை.மு. சையத் அமீருல்லாஹ், முதுகலை இரண்டாமாண்டு, தமிழ்த் துறை, திருவள்ளுவர் அரசு கலைக் கல்லூரி, இராசிபுரம், நாமக்கல் மாவட்டம்.

**இரண்டாம் பரிசு:**

பா. கார்த்தி, இளமறிவியல் மூன்றாமாண்டு, விலங்கியல் துறை, சிக்கய்ய நாயக்கர் கல்லூரி, ஈரோடு.

**மூன்றாம் பரிசு:**

அ.பி. தமிழ்ப்பொழில், இளங்கலை இரண்டாமாண்டு, தமிழ்த் துறை, ஸ்ரீ விஜய் வித்யாலயா கலை மற்றும் அறிவியல் கல்லூரி (மகளிர்), நல்லம்பள்ளி, தருமபுரி மாவட்டம்.

கட்டுரைப் போட்டியிலும் கவிதைப் போட்டியிலும் வென்றவர்களுக்கான பரிசளிப்பு விழா மகாகவி பாரதியாரின் பிறந்த நாளன்று (11.12.2024) ஆளுநர் மாளிகையில் நடைபெற்றது. மேதகு தமிழக ஆளுநர் திரு. ஆர்.என். ரவி அவர்கள் வெற்றி பெற்ற பள்ளி, கல்லூரி மாணவர்களுக்குப் பரிசுத்தொகையை வழங்கிப் பாராட்டு தெரிவித்தார். இவ்விழாவில் செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவன இயக்குநர் பேராசிரியர் இரா. சந்திரசேகரன், பதிவாளர் முனைவர் ரெ. புவனேஸ்வரி ஆகியோர் கலந்துகொண்டனர்.

## அரிய ஓலைச்சுவடிகள்
## செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனத்தில் ஒப்படைப்பு





செங்கல்பட்டில் கிடைத்த ஆறெழுத்தந்தாதி, திருவாசகம் - நீத்தல் விண்ணப்பம், கந்தரனுபூதி (இரு சுவடிக் கட்டுகள்), திருவாசகம், கணியம் - பாம்பு மாந்திரீகம் உள்ளிட்ட ஏழு அரிய ஓலைச்சுவடிகளைச் செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்டத்தின் மேனாள் இயக்குநர் முனைவர் தங்க. காமராசு, செந்தமிழ்த் திருத்தேர் தூயதமிழ் மாணவர் இயக்கத்தினைச் சேர்ந்த திரு. திவாகர், செல்வி திவ்யா, திரு. பசுபதி, மதுரை திருவரசன், புட்பராசு ஆகியோரடங்கிய குழுவினர் செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவன இயக்குநர் பேராசிரியர் இரா. சந்திரசேகரனிடம் 29.05.2024 அன்று ஒப்படைத்தனர்.

## நிறுவன வரவுசெலவுத் தணிக்கை


செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனத்தில் 14.10.2024 முதல் 18.10.2024 வரை நடுவண் கணக்குத் தணிக்கை அலுவலர்களால் 2023 - 2024ஆம் ஆண்டிற்கான நிறுவன வரவுசெலவுக் கணக்குகள் தணிக்கை செய்யப்பட்டன.

# தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் வருகை

மாண்புமிகு தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் திரு. மு.பெ. சாமிநாதன் அவர்கள் 07.03.2024 அன்று செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனத்திற்கு வருகைபுரிந்து பார்வையிட்டார். செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம் மேற்கொண்டுவரும் ஆய்வுப் பணிகள் குறித்து நிறுவன இயக்குநர் பேராசிரியர் இரா. சந்திரசேகரன் அமைச்சர் அவர்களிடம் விளக்கிக் கூறினார். இந்நிகழ்ச்சியில் தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறைச் செயலாளர் முனைவர் இல. சுப்பிரமணியன், இ.ஆ.ப., தமிழ் வளர்ச்சித் துறை இயக்குநர் முனைவர் ஔவை. ந. அருள், செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனத்தின் பதிவாளர் முனைவர் ரெ. புவனேஸ்வரி, நிதி அலுவலர் திரு. ஆ. குமரேசன் ஆகியோர் கலந்துகொண்டனர்.











# அமெரிக்க மருத்துவ மாணவர்கள் வருகை

அமெரிக்காவில் அட்லாண்டாவில் உள்ள மோர்ஹவுஸ் மருத்துவக் கல்லூரியின் முதுநிலை மாணவர்கள் மருத்துவர் ஜலேஷியா ஜேட் கிரிகோரி, மருத்துவர் கைலென் டர்னட், மருத்துவர் கேபிரியலா செப்லோவிச், மருத்துவர் ஜீன் ஒசுஹோ ஆகியோர் தம் பட்டப்படிப்பின் ஒரு பகுதியாகச் ‘சித்த மருத்துவம்’ குறித்த பாடப் பயிற்சிக்காகச் சென்னை வருகைபுரிந்தனர். அதன் ஒரு பகுதியாக 17.10.2024 அன்று செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனத்திற்கு வருகைபுரிந்து பார்வையிட்டனர். இந்நிகழ்வில் செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவன இயக்குநர் பேரா. இரா. சந்திரசேகரன், நிறுவனப் பதிவாளர் முனைவர் ரெ. புவனேஸ்வரி, மோர்ஹவுஸ் மருத்துவக் கல்லூரியின் பேராசிரியர் மருத்துவர் ராஜகோபால ஸ்ரீதரன், சென்னையிலுள்ள இந்திய நலவாழ்வு நல்லறச் செயலர் மருத்துவர் முனைவர் ப. செல்வசண்முகம், நிறுவன இளநிலை ஆராய்ச்சி அலுவலர் முனைவர் த. சரவணன், தரவு உள்ளீட்டாளர் திரு. தி.ஞா. அருள்ஒளி ஆகியோர் பங்கேற்றனர்.









## பார்வை மாற்றுத்திறனாளிகளுக்குப் பிரெயில் நூல்கள் வழங்கும் நிகழ்வு

செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனத்தின் 41 தமிழ்ச் செவ்விலக்கிய நூல்கள், 5 இலக்கண நூல்கள் ஆகியவற்றின் பிரெயில் நூல்களைப் பார்வை மாற்றுத்திறனாளி மாணவருக்கு இலவசமாக வழங்கும் நிகழ்வு 12.02.2024 அன்று நிறுவனத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வில் வேலூர், முத்துரங்கம் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் இளங்கலைத் தமிழ், இரண்டாமாண்டு பயிலும் பார்வை மாற்றுத்திறனாளி மாணவர் திரு. அசோக்குமாருக்கு நிறுவன இயக்குநர் பேரா. இரா. சந்திரசேகரன் அவர்களும் பதிவாளர் முனைவர் ரெ. புவனேஸ்வரி அவர்களும் பிரெயில் நூல்களை இலவசமாக வழங்கித் தொடங்கிவைத்தனர்.

# மத்தியக் கல்வி அமைச்சகத்தின் கூடுதல் செயலாளர் வருகை

மத்தியக் கல்வி அமைச்சகத்தின் கூடுதல் செயலாளர் திரு. சுனில் குமார் பர்ன்வால், இ.ஆ.ப., அவர்கள் 28.11.2024 அன்று செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனத்திற்கு வருகைபுரிந்து, ஆய்வுப் பணிகள் குறித்து நிறுவன இயக்குநர் பேராசிரியர் இரா. சந்திரசேகரன் அவர்களிடம் கேட்டறிந்தார். இந்நிகழ்வில் செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனத்தின் துணைத்தலைவர் பேராசிரியர் மருத்துவர் சுதா சேஷய்யன், பதிவாளர் முனைவர் ரெ. புவனேஸ்வரி ஆகியோர் கலந்துகொண்டனர்.














# செம்மொழி ஒடியா
# மையத் திட்ட இயக்குநர் வருகை

ஒடிசாவின் புவனேஸ்வரிலுள்ள செம்மொழி ஒடியா மையத்தின் திட்ட இயக்குநர் பேராசிரியர் பசந்தகுமார் பாண்டா அவர்கள் 12.12.2024 அன்று செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனத்திற்கு வருகைபுரிந்து, நிறுவனத்தில் மேற்கொள்ளப்பட்டு வரும் ஆய்வுப் பணிகள் குறித்து இயக்குநர் பேராசிரியர் இரா. சந்திரசேகரன் அவர்களிடம் கேட்டறிந்தார். நிறுவனப் பதிவாளர் முனைவர் ரெ. புவனேஸ்வரி இந்நிகழ்வில் பங்கேற்றார்.




















# கூட்டங்கள்

**கூட்டம் 1**

## கருத்துரையாடல் கூட்டம்

செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனத்தில் ‘இலக்கிய நாட்டுப்புறவியல்’ என்னும் பொருண்மையிலான கருத்துரையாடல் கூட்டம் 04.01.2024 முதல் 09.01.2024 வரை நடைபெற்றது. செம்மொழித் தமிழிலக்கிய, இலக்கணங்களில் பதிவாகியுள்ள பண்பாட்டுப் பதிவுகளை அடையாளங்கண்டு, அவற்றை இலக்கிய நாட்டுப்புறவியல் ஆய்வு அணுகுமுறையில் ஆராயும் தொலைநோக்குச் செயற்திட்டம் உருவாக்கப்பட்டது. இக்கூட்டத்தில் திண்டுக்கல், காந்திகிராம கிராமிய நிகர்நிலைப் பல்கலைக்கழகத் தமிழ், இந்திய மொழிகள் மற்றும் கிராமியக் கலைகள் புலப் பேராசிரியர் ஒ. முத்தையா புறநிலை வல்லுநராகக் கலந்துகொண்டார். ஆறு நாட்கள் நடைபெற்ற இக்கூட்ட முடிவில் இலக்கிய நாட்டுப்புறவியல் என்னும் பொருண்மையில் உருவாக்கப்பட்ட ஆய்வுத்திட்ட அறிக்கை, செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவன இயக்குநர் பேராசிரியர் இரா. சந்திரசேகரன், நிறுவனப் பதிவாளர் முனைவர் ரெ. புவனேஸ்வரி ஆகியோரிடம் அளிக்கப்பட்டது. நிறுவன இளநிலை ஆராய்ச்சி அலுவலர் முனைவர் அ. ஆரோக்கியதாசு இக்கூட்டத்தை ஒருங்கிணைத்தார்.

**கூட்டம் 2**

## முனைவர் பட்ட ஆய்வாளர்களுக்கான மதிப்பீட்டுக் குழுக் கூட்டம்

செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனத்தின் நிதி நல்கையின்கீழ் முனைவர் பட்ட ஆய்வு (2022 - 2024) மேற்கொள்பவர்களின் ஆய்வுப் பணிகளை மதிப்பிடுவதற்கான மதிப்பீட்டுக் குழுக் கூட்டம் 11.01.2024 அன்று நிறுவனத்தில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனத்தின் மேனாள் ஆய்வறிஞர் பேராசிரியர் ப. மருதநாயகம் வல்லுநராகக் கலந்துகொண்டு ஆய்வாளர்களின் ஆய்வுப் பணிகளை மதிப்பீடு செய்தார். நிறுவன ஆராய்ச்சி அலுவலர் முனைவர் கு. ஜெயகுமாரி இக்கூட்டத்தை ஒருங்கிணைத்தார்.

**கூட்டம் 3**

## கருத்துரையாடல் கூட்டம்




செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனத்தில் ‘கள ஆய்வின் மூலமாகத் தொகுத்து வைக்கப்பட்டுள்ள இருளர் மற்றும் மீனவர் வழக்காறுகளை நூல்களாக வெளியிடுதல், தேசியக் கருத்தரங்கு நடத்துதல், அக்கருத்தரங்கின் ஆய்வுக் கட்டுரைகளைத் தொகுத்து ஆய்வுக்கோவையாக வெளியிடுதல்’ என்னும் பொருண்மையிலான கருத்துரையாடல் கூட்டம் 23.03.2024, 24.03.2024 ஆகிய இரண்டு நாட்கள் நடைபெற்றது. இக்கூட்டத்தில் திண்டுக்கல், காந்திகிராம கிராமிய நிகர்நிலைப் பல்கலைக்கழகத் தமிழ், இந்திய மொழிகள் மற்றும் கிராமியக் கலைகள் புலப் பேராசிரியர் ஒ. முத்தையாவும், புதுச்சேரி மொழியியல் பண்பாட்டு ஆராய்ச்சி நிறுவன மேனாள் இயக்குநர் பேராசிரியர் சீ. பக்தவத்சல பாரதியும் புறநிலை வல்லுநர்களாகக் கலந்துகொண்டனர். நிறுவன இளநிலை ஆராய்ச்சி அலுவலர் முனைவர் அ. ஆரோக்கியதாசு இக்கூட்டத்தை ஒருங்கிணைத்தார்.

கூட்டம் 4

## பாடத்திட்ட உருவாக்கக் குழுக் கூட்டம்

செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனத்தில் இணையவழிச் சான்றிதழ் படிப்பிற்கான 'இந்தி வழித் தமிழ்க் கற்றல்' பாடத்திற்குப் பாடத்திட்ட உருவாக்கக் குழுக் கூட்டம் 03.04.2024, 04.04.2024, 05.04.2024 ஆகிய மூன்று நாட்கள் மொழிகள் பள்ளி, மொழிக் கல்வியியல் புலம் மற்றும் மொழித் தொழில்நுட்பவியல் புலத்தின் சார்பில் நடைபெற்றது. இந்தி ஆசிரியர் முனைவர் மா. கோவிந்தராஜன் புறநிலை வல்லுநராகக் கலந்துகொண்டு பாடத்திட்டத்தை உருவாக்கினார். இக்கூட்டத்தில் நிறுவன ஆராய்ச்சி அலுவலர் முனைவர் ந. தேவி, இளநிலை ஆராய்ச்சி அலுவலர் முனைவர் ந. பெரியசாமி, நிரலாளர்கள் திரு. சு. கார்த்திகேயன், முனைவர் இரா. அகிலன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

கூட்டம் 5

## பாடத்திட்ட உருவாக்கக் குழுக் கூட்டம்

செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனத்தில் இணையவழிச் சான்றிதழ் படிப்பிற்கான 'நாணயவியல்' பாடத்திற்குப் பாடத்திட்ட உருவாக்கக் குழுக் கூட்டம் 25.04.2024, 03.05.2024 ஆகிய இரண்டு நாட்கள் மொழிகள் பள்ளி, மொழிக் கல்வியியல் புலம் மற்றும் மொழித் தொழில்நுட்பவியல் புலத்தின் சார்பில் நடைபெற்றது. நாணயவியலாளர் திரு. ச. கார்த்திக் புறநிலை வல்லுநராகக் கலந்துகொண்டு பாடத்திட்டத்தை உருவாக்கினார். இக்கூட்டத்தில் நிறுவன ஆராய்ச்சி அலுவலர் முனைவர் ந. தேவி, இளநிலை ஆராய்ச்சி அலுவலர் முனைவர் ந. பெரியசாமி, நிரலாளர்கள் திரு. சு. கார்த்திகேயன், முனைவர் இரா. அகிலன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

கூட்டம் 6

## பாடத்திட்ட உருவாக்கக் குழுக் கூட்டம்

செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனத்தில் இணையவழிச் சான்றிதழ் படிப்பிற்கான 'சுவடியியல்' பாடத்திற்குப் பாடத்திட்ட உருவாக்கக் குழுக் கூட்டம் 19.07.2024, 20.07.2024 ஆகிய இரண்டு நாட்கள் மொழிகள் பள்ளி, மொழிக் கல்வியியல் புலம் மற்றும் மொழித் தொழில்நுட்பவியல் புலத்தின் சார்பில் நடைபெற்றது. தமிழ்நாடு அரசு, தொல்லியல் துறையின் மாநில சுவடியியல் குழுவின் ஒருங்கிணைப்பாளர் முனைவர் கோ. சசிகலா புறநிலை வல்லுநராகக் கலந்துகொண்டு பாடத்திட்டத்தை உருவாக்கினார். இக்கூட்டத்தில் நிறுவன ஆராய்ச்சி அலுவலர் முனைவர் ந. தேவி, இளநிலை ஆராய்ச்சி அலுவலர் முனைவர் ந. பெரியசாமி, நிரலாளர்கள் திரு. சு. கார்த்திகேயன், முனைவர் இரா. அகிலன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

கூட்டம் 7

## கருத்துரையாடல் கூட்டம்

செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனத்தில் 'தமிழக நாட்டுப்புற நிகழ்த்துக்கலைகளின் களஞ்சியம் உருவாக்குதல்' என்னும் பொருண்மையிலான கருத்துரையாடல் கூட்டம் 11.08.2024, 12.08.2024 ஆகிய இரண்டு நாட்கள் நடைபெற்றது. இக்கூட்டத்தில் திண்டுக்கல், காந்திகிராம கிராமிய நிகர்நிலைப் பல்கலைக்கழகத் தமிழ், இந்திய மொழிகள் மற்றும் கிராமியக் கலைகள் புலப் பேராசிரியர் ஒ. முத்தையாவும், புதுச்சேரி மொழியியல் பண்பாட்டு ஆராய்ச்சி நிறுவன மேனாள் இயக்குநர் பேராசிரியர் சீ. பக்தவத்சல பாரதியும் புறநிலை வல்லுநர்களாகக் கலந்துகொண்டனர். நிறுவன இளநிலை ஆராய்ச்சி அலுவலர் முனைவர் அ. ஆரோக்கியதாசு இக்கூட்டத்தை ஒருங்கிணைத்தார்.

கூட்டம் 8

## கருத்துரையாடல் கூட்டம்

செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனத்தில் பிஎம் இ-வித்யா சிஐசிடி தமிழ்த் தொலைக்காட்சியின் காணொளிகளுக்காகத் 'தமிழக நாட்டுப்புறப் பண்பாட்டு நிகழ்வுகள், வடிவமைப்புகள்' என்னும் பொருண்மையிலான கருத்துரையாடல் கூட்டம் 13.08.2024 அன்று நடைபெற்றது. இக்கூட்டத்தில் திண்டுக்கல், காந்திகிராம கிராமிய நிகர்நிலைப் பல்கலைக்கழகத் தமிழ், இந்திய மொழிகள் மற்றும் கிராமியக் கலைகள் புலப் பேராசிரியர் ஒ. முத்தையாவும், புதுச்சேரி மொழியியல் பண்பாட்டு ஆராய்ச்சி நிறுவன மேனாள் இயக்குநர் பேராசிரியர் சீ. பக்தவத்சல பாரதியும் புறநிலை வல்லுநர்களாகக் கலந்துகொண்டனர். ஐம்பத்தொரு தலைப்புகளில் தமிழக நாட்டுப்புறப் பண்பாட்டு நிகழ்வுகள், வடிவமைப்புகள் பட்டியலிடப்பட்டுச் செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவன இயக்குநர் பேராசிரியர் இரா. சந்திரசேகரன், நிறுவனப் பதிவாளர் முனைவர் ரெ. புவனேஸ்வரி ஆகியோரிடம் அளிக்கப்பட்டது.

நிறுவன இளநிலை ஆராய்ச்சி அலுவலர் முனைவர் அ. ஆரோக்கியதாசு இக்கூட்டத்தை ஒருங்கிணைத்தார்.

**கூட்டம் 9**

## பாடத்திட்ட உருவாக்கக் குழுக் கூட்டம்

செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனத்தில் இணையவழிச் சான்றிதழ் படிப்பிற்கான 'தொல்லியலும் கல்வெட்டியலும்' பாடத்திற்குப் பாடத்திட்ட உருவாக்கக் குழுக் கூட்டம் 03.12.2024, 05.12.2024, 09.12.2024 ஆகிய மூன்று நாட்கள் மொழிகள் பள்ளி, மொழிக் கல்வியியல் புலம் மற்றும் மொழித் தொழில்நுட்பவியல் புலத்தின் சார்பில் நடைபெற்றது. தமிழ்நாடு அரசு, தொல்லியல் துறையின் மேனாள் கல்வெட்டாய்வாளர் திரு. சி. ராமச்சந்திரன் புறநிலை வல்லுநராகக் கலந்துகொண்டு பாடத்திட்டத்தை உருவாக்கினார். இக்கூட்டத்தில் நிறுவன ஆராய்ச்சி அலுவலர் முனைவர் ந. தேவி, இளநிலை ஆராய்ச்சி அலுவலர் முனைவர் ந. பெரியசாமி, நிரலாளர்கள் திரு. சு. கார்த்திகேயன், முனைவர் இரா. அகிலன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

**கூட்டம் 10**

## முனைவர் பட்ட ஆய்வாளர்களுக்கான மதிப்பீட்டுக் குழுக் கூட்டம்



செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனத்தின் நிதி நல்கையின்கீழ் முனைவர் பட்ட ஆய்வு (2023 – 2025) மேற்கொள்பவர்களின் ஆய்வுப் பணிகளை மதிப்பிடுவதற்கான மதிப்பீட்டுக் குழுக் கூட்டம் 20.12.2024 அன்று நிறுவனத்தில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் சென்னைக் கிறித்துவக் கல்லூரியின் மேனாள் தமிழ்ப் பேராசிரியர் முனைவர் சா. பாலுசாமி, தமிழ்நாடு அரசு, தொல்லியல் துறையின் மேனாள் முதுநிலைக் கல்வெட்டாய்வாளர் முனைவர் ஆ. பத்மாவதி ஆகியோர் வல்லுநர்களாகக் கலந்து கொண்டு ஆய்வாளர்களின் ஆய்வுப் பணிகளை மதிப்பீடு செய்தனர். நிறுவன ஆராய்ச்சி அலுவலர் முனைவர் கு. ஜெயகுமாரி இக்கூட்டத்தை ஒருங்கிணைத்தார்.

**கூட்டம் 11**

## தமிழ்ச் செவ்விலக்கியங்கள் – மலையாள மொழிபெயர்ப்புத் திட்ட மதிப்பீட்டுக் குழுக் கூட்டம்



செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம் மேற்கொண்டுவரும் தமிழ்ச் செவ்விலக்கிய மலையாள மொழிபெயர்ப்புத் திட்டப் பணிகளை மதிப்பீடு செய்வதற்கான மதிப்பீட்டுக் குழுக் கூட்டம் 23.12.2024 அன்று நிறுவனத்தில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் சென்னைப் பல்கலைக்கழக மலையாள மொழித் துறையின் மேனாள் பேராசிரியர் சி. ஜி. ராஜேந்திர பாபு வல்லுநராகக் கலந்துகொண்டு முடித்தளிக்கப்பெற்ற மலையாள மொழிபெயர்ப்புத் திட்டப் பணிகளை மதிப்பீடு செய்தார். நிறுவன ஆராய்ச்சி அலுவலர் முனைவர் கு. ஜெயகுமாரி இக்கூட்டத்தை ஒருங்கிணைத்தார்.

**பல்சான் றீரே பல்சான் றீரே**
**கயன்முள் ளன்ன நரைமுதிர் திரைகவுட்**
**பயனின் மூப்பிற் பல்சான் றீரே**
**கணிச்சிக் கூர்ம்படைக் கடுந்திற லொருவன்**
**பிணிக்குங் காலை யிரங்குவிர் மாதோ**
**நல்லது செய்த லாற்றீ ராயினும்**
**அல்லது செய்த லோம்புமி னதுதான்**
**எல்லாரு முவப்ப தன்றியும்**
**நல்லாற்றுப் படூஉ நெறியுமா ரதுவே.**

- புறநானூறு 195




**பயிலரங்கம் 1**

## விஸ்வ பாரதி மத்தியப் பல்கலைக்கழக மாணவர்களுக்குத் தமிழ்ச் செவ்விலக்கியங்களை அறிமுகப்படுத்துதல்

விஸ்வ பாரதி மத்தியப் பல்கலைக்கழக மாணவர்களுக்குத் தமிழ்ச் செவ்விலக்கியங்களை அறிமுகப்படுத்தும் நோக்கில் ஒன்பது நாள் பயிலரங்கம் 18.01.2024 முதல் 26.01.2024 வரை செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனத்தில் நடைபெற்றது. இப்பயிலரங்கில் விஸ்வ பாரதி மத்தியப் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த முப்பத்துமூன்று இளநிலை மாணவர்கள் பங்கேற்றனர். பயிலரங்கின் முப்பத்துநான்கு அமர்வுகளிலும் தமிழ்ச் செவ்விலக்கியங்களை அறிமுகப்படுத்தும் நோக்கில் துறைசார் அறிஞர்கள் ஆய்வுரை வழங்கினர்.






பயிலரங்கின் தொடக்க விழாவிலும் நிறைவு விழாவிலும் நிறுவனத்தின் இயக்குநர் பேராசிரியர் இரா. சந்திரசேகரன், பதிவாளர் முனைவர் ரெ. புவனேஸ்வரி ஆகியோர் முறையே தலைமையுரையும் வாழ்த்துரையும் வழங்கினர். கல்வியியல் ஆலோசகரும் மொழிபெயர்ப்பாளருமான முனைவர் சீதாலட்சுமி விஸ்வநாத் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டு தொடக்க விழாவில் சிறப்புரையாற்றினார். இப்பயிலரங்கின் ஒருங்கிணைப்பாளராக நிறுவன ஆராய்ச்சி அலுவலர் முனைவர் கு. ஜெயகுமாரியும் இணை ஒருங்கிணைப்பாளராக இளநிலை ஆராய்ச்சி அலுவலர் முனைவர் மா. சுசிலாவும் செயல்பட்டனர்.

**பயிலரங்கம் 2**

## செம்மொழித் தமிழ் இலக்கண, இலக்கியங்கள் காட்டும் தமிழர் மரபும் நீட்சியும் (தெய்வம், வழிபாடு, சடங்கு, குலக்குறி)

செம்மொழித் தமிழ் இலக்கண, இலக்கியங்களின் தோற்றத்திற்கும் வளர்ச்சிக்கும் நாட்டுப்புற வழக்காறுகள் மூலமாக இருக்கின்றன என்பது குறித்து அறிஞர்கள் பலரும் ஆராய்ந்து வெளிப்படுத்தியுள்ளனர். செம்மொழித் தமிழ் இலக்கண, இலக்கியங்கள் காட்டும் தெய்வம், தொன்மம், வழிபாடு, சடங்கு, குலக்குறி போன்றவற்றை நாட்டுப்புறவியல் அணுகுமுறையில் நோக்கும் வகையில் "செம்மொழித் தமிழ் இலக்கண, இலக்கியங்கள்காட்டும்தமிழர்மரபும்நீட்சியும்" என்னும் பத்து நாள் பயிலரங்கம் 14.02.2024 முதல் 23.02.2024 வரை செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனத்தில் நடைபெற்றது. பல்வேறு பல்கலைக்கழகங்கள், கல்லூரிகளிலிருந்து நாற்பது ஆய்வாளர்கள் பங்கேற்ற இப்பயிலரங்கின் முப்பது அமர்வுகளிலும் பல்வேறு ஆய்வுப்பரப்பில் துறைசார் அறிஞர்கள் ஆய்வுரை வழங்கினர். இப்பயிலரங்கின் ஒருபகுதியாக 17.02.2024, 18.02.2024 ஆகிய இரண்டு நாட்கள் முறையே மாமல்லபுரம் மீனவர்களிடமும் திருக்கழுக்குன்றம்,






கொத்திமங்கலம் கிராம இருளர் பழங்குடியினரிடமும் கள ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. இக்கள ஆய்வுப் பணியில் ஈடுபட்ட ஆய்வாளர்களுக்குத் திண்டுக்கல், காந்திகிராம கிராமிய நிகர்நிலைப் பல்கலைக்கழகத் தமிழ், இந்திய மொழிகள் மற்றும் கிராமியக் கலைகள் புலப் பேராசிரியர் ஒ. முத்தையா அவர்கள் கள ஆய்வு நெறிமுறைகள் குறித்து உரைவழங்கிக் கள ஆய்வுப் பயிற்சியும் அளித்தார்.

பயிலரங்கின் தொடக்க விழாவிலும் நிறைவு விழாவிலும் நிறுவனத்தின் இயக்குநர் பேராசிரியர் இரா. சந்திரசேகரன், பதிவாளர் முனைவர் ரெ. புவனேஸ்வரி ஆகியோர் முறையே தலைமையுரையும் வாழ்த்துரையும் வழங்கினர். புதுச்சேரி மொழியியல் பண்பாட்டு ஆராய்ச்சி நிறுவன மேனாள் இயக்குநர் பேராசிரியர் சீ. பக்தவத்சல பாரதி சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு தொடக்க விழாவிலும், திருநெல்வேலி, மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழக முதுகலை விரிவாக்க மையத்தின் இயக்குநர் பேராசிரியர் ஞா. ஸ்டீபன் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டு நிறைவு விழாவிலும் சிறப்புரை ஆற்றினர். இப்பயிலரங்கில் நிறுவன இளநிலை ஆராய்ச்சி அலுவலர்களான முனைவர் அ. ஆரோக்கியதாசு ஒருங்கிணைப்பாளராகவும் முனைவர் சே. கரும்பாயிரம் இணை ஒருங்கிணைப்பாளராகவும் செயல்பட்டனர்.

**பயிலரங்கம் 3**

# சமூகவியல், உளவியல், மொழியியல் மற்றும் பண்பாட்டியல் நோக்கில் தொல்காப்பிய உரைகள்





உலகின் பழமையான நூல்களில் ஒன்றான தொல்காப்பியம், தமிழரின் மொழி ஆற்றலையும், பண்பாட்டு வாழ்வியல் கூறுகளையும் வெளிக்காட்டுவதோடு வருங்காலப் புதுஉலகுக்கு வழிகாட்டியாகவும் திகழ்கிறது. தமிழ்மொழியின் இலக்கணம், பண்பாடு ஆகியவற்றிற்கு ஓர் உரைகல்லாகவும் இந்நூல் விளங்குகிறது. சங்கக் கவிஞர்களின் மனச்சாட்சி 'தொல்காப்பியம்' என்று பிரான்சுவா குரோ கூறியுள்ளார். இந்நூலுக்கு இளம்பூரணர், சேனாவரையர், நச்சினார்க்கினியர், பேராசிரியர், கல்லாடர் முதலான உரையாசிரியர்கள் உரையெழுதியுள்ளனர். தொல்காப்பியத்தின் கருத்தை உணரவும் உணர்த்தவும் புலவர் பெருமக்கள் காலந்தோறும் பல உரைகளை உருவாக்கினார்கள். அம்முயற்சியின் விளைவாய் உரைகள் பலபெருகி, இந்நூல் உரைவளம் கொண்ட பேரிலக்கணமாகத் திகழ்கிறது. மூவாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர்த் தமிழ்மொழிக்கு இலக்கணம் வகுத்த தொல்காப்பியரின் அணுகுமுறை மொழியியல் சார்ந்ததாகும். தொல்காப்பிய உரைகளை முன்வைத்துத் தொல்காப்பியத்தில் காணப்படும் சமூகம், பண்பாடு, உளவியல் கூறுகளை மொழியியல்

பார்வையில் அணுகி ஆராய்ந்து ஆய்வாளர்களுக்கு எடுத்தியம்பும் நோக்கில் ‘சமூகவியல், உளவியல், மொழியியல் மற்றும் பண்பாட்டியல் நோக்கில் தொல்காப்பிய உரைகள்’ என்னும் பத்து நாள் பயிலரங்கம் 20.02.2024 முதல் 29.02.2024 வரை செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனத்தில் நடைபெற்றது. பல்வேறு பல்கலைக்கழகங்கள், கல்லூரிகளிலிருந்து முப்பத்தேழு ஆய்வாளர்கள் பங்கேற்ற இப்பயிலரங்கின் முப்பத்தெட்டு அமர்வுகளிலும் துறைசார் அறிஞர்கள் ஆய்வுரை வழங்கினர்.

பயிலரங்கின் தொடக்க விழாவிலும் நிறைவு விழாவிலும் நிறுவனத்தின் இயக்குநர் பேராசிரியர் இரா. சந்திரசேகரன், பதிவாளர் முனைவர் ரெ. புவனேஸ்வரி ஆகியோர் முறையே தலைமையுரையும் வாழ்த்துரையும் வழங்கினர். சிதம்பரம், அண்ணாமலைப் பல்கலைக்கழக மொழியியல் உயராய்வு மையத்தின் உதவிப் பேராசிரியர் முனைவர் ந. லலிதா ராஜா சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டு தொடக்க விழாவிலும், தஞ்சாவூர்த் தமிழ்ப் பல்கலைக்கழக இந்திய மொழிகள் பள்ளியின் மேனாள் துறைத்தலைவர் பேராசிரியர் இரா. முரளிதரன் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டு நிறைவு விழாவிலும் சிறப்புரையாற்றினர். இப்பயிலரங்கில் நிறுவன இளநிலை ஆராய்ச்சி அலுவலர்களான முனைவர் மு. செல்வதுரை ஒருங்கிணைப்பாளராகவும் முனைவர் வ. மாரியப்பன் இணை ஒருங்கிணைப்பாளராகவும் செயல்பட்டனர்.

**பயிலரங்கம் 4**

# தமிழ்ச் செவ்வியல் நூல்களின் முதற்பதிப்புகளும் மறுபதிப்புகளும் - ஒப்பாய்வு

நாற்பத்தொரு தமிழ்ச் செவ்வியல் நூல்களின் முதற்பதிப்புகள் குறித்த செய்திகளையும் அவற்றின் பதிப்பு முறைகள் குறித்த விவரங்களையும் நாம் அறிந்துவைத்திருக்கிறோம். ஆனால் இம்முதற்பதிப்பு நூல்கள் மீண்டும் மறுபதிப்புகளாக அவ்வப்போது வெளிவந்திருக்கின்ற வரலாறு குறித்தும் அவற்றின் பதிப்பு முறைகள் குறித்தும் அறிவது இன்றியமையாததாகின்றது. ஒரு பதிப்பாசிரியர் ஒரு நூலைப் பலமுறைப் பதிப்பிப்பதற்கான காரணங்களையும் நோக்கங்களையும் அறிவது ஆய்வுச் சூழலின் தேவையாகும். இவ்வாறு மறுபதிப்புகளின் தேவை ஏன் எழுகிறது? எதற்காகப் பதிப்பிக்கப்படுகிறது? பதிப்பிக்கப்பட வேண்டிய கூடுதல் தேவை என்ன? என்ற வரலாற்றை அறிவது தமிழ்ப் புலமைச் சமூகத்தின் வரலாற்றை அறிவதாகும்.





தொல்காப்பியம் முதலாக முத்தொள்ளாயிரம் ஈறாக நாற்பத்தொரு செவ்வியல் நூல்களின் முதற்பதிப்புகள், மறுபதிப்புகள் குறித்து அறிந்துகொள்வதன் மூலம் செம்பதிப்பின் தேவைகளையும் அறிந்துகொள்ள முடியும். தமிழ்க் கல்விப் புலத்திலுள்ள ஆய்வாளர்களிடம் செம்பதிப்புப் பணிகளை அறியவைத்தலும் அது குறித்த ஆய்வில் ஈடுபட வைப்பதுமான விழிப்புணர்வை ஏற்படுத்தும் நோக்கில் “தமிழ்ச் செவ்வியல் நூல்களின் முதற்பதிப்புகளும் மறுபதிப்புகளும் - ஒப்பாய்வு” என்னும் ஏழு நாள் பயிலரங்கம் 28.02.2024 முதல் 05.03.2024 வரை செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனத்தில் நடைபெற்றது. இருபத்தைந்து ஆய்வாளர்கள் பங்கேற்ற இப்பயிலரங்கின் இருபத்தாறு அமர்வுகளிலும் பல்வேறு பரந்துபட்ட ஆய்வுப்பரப்பில் துறைசார் அறிஞர்கள் ஆய்வுரை வழங்கினர்.

பயிலரங்கின் தொடக்க விழாவிலும் நிறைவு விழாவிலும் நிறுவனத்தின் இயக்குநர் பேராசிரியர் இரா. சந்திரசேகரன், பதிவாளர் முனைவர் ரெ. புவனேஸ்வரி ஆகியோர் முறையே தலைமையுரையும் வாழ்த்துரையும் வழங்கினர். கோயம்புத்தூர், குமரகுரு கலை மற்றும் அறிவியல் கல்லூரியின் தமிழ்த் துறை இணைப்பேராசிரியர் முனைவர் சு. வேணுகோபால் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டு தொடக்க விழாவிலும், செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனத்தின் துணைத்தலைவர் பேராசிரியர்

இ. சுந்தரமூர்த்தி சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டு நிறைவு விழாவிலும் சிறப்புரையாற்றினர். இப்பயிலரங்கில் நிறுவன இளநிலை ஆராய்ச்சி அலுவலர் முனைவர் ம. நாகராஜன் ஒருங்கிணைப்பாளராகவும் இளநிலை ஆய்வு வளமையர் திருமதி ம. தாமரைச்செல்வி இணை ஒருங்கிணைப்பாளராகவும் செயல்பட்டனர்.

**பயிலரங்கம் 5**

## தமிழ்ச் செவ்விலக்கிய மரபில் மாயோன்






உலகின் தொல்குடிகளுள் ஒன்றான தமிழ்க்குடியின் பண்பாடு தனித்தன்மை வாய்ந்ததாகும். தமிழர்கள் தாம் வாழும் சூழலுக்கு ஏற்ப ஒவ்வொரு நிலத்திற்கும் ஏற்ற கருப்பொருள்களில் ஒன்றாகத் தெய்வங்களைக் குறிப்பிட்டுள்ளனர். தமிழின் தொன்மையான நூலான தொல்காப்பியம் மாயோன், சேயோன், வேந்தன், வருணன் என்று நால்வகைத் தெய்வங்களைக் குறிப்பிடுகிறது. இவற்றுள் காடும் காடுசார்ந்த இடமான முல்லை நிலத்திற்குரிய தெய்வமாக மாயோன் முதன்மையாகச் சிறப்பிக்கப்படுகிறார். “மாயோன் மேய காடுறை உலகமும்” என்னும் தொல்காப்பிய நூற்பா மாயோனின் பன்னெடுங்கால வழிபாட்டை உணர்த்துவதாக உள்ளது. இவ்வழிபாட்டு மரபை ஆய்வு நோக்கில் மாணவர்களுக்கு எடுத்துரைக்கும் வகையில் ‘தமிழ்ச் செவ்விலக்கிய மரபில் மாயோன்’ என்னும் ஏழு நாள் பயிலரங்கம் 01.03.2024 முதல் 07.03.2024 வரை செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனத்தில் நடைபெற்றது. இருபத்தாறு ஆய்வாளர்கள் பங்கேற்ற இப்பயிலரங்கின் இருபத்தாறு அமர்வுகளிலும் பல்வேறு பரந்துபட்ட ஆய்வுப்பரப்பில் துறைசார் அறிஞர்கள் ஆய்வுரை வழங்கினர்.

பயிலரங்கின் தொடக்க விழாவிலும் நிறைவு விழாவிலும் நிறுவனத்தின் இயக்குநர் பேராசிரியர் இரா. சந்திரசேகரன், பதிவாளர் முனைவர் ரெ. புவனேஸ்வரி ஆகியோர் முறையே தலைமையுரையும் வாழ்த்துரையும் வழங்கினர். அனைத்திந்திய தமிழ் எழுத்தாளர்கள் சங்கத்தின் துணைத்தலைவர் நாவலர் நாராயணன் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டு தொடக்க விழாவிலும், சக்தி விகடனின் மேனாள் கௌரவப் பொறுப்பாசிரியர் திரு. பி. என். பரசுராமன் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டு நிறைவு விழாவிலும் சிறப்புரையாற்றினர். இப்பயிலரங்கில் நிறுவன ஆராய்ச்சி அலுவலர் முனைவர் இரா. அருள்மணி ஒருங்கிணைப்பாளராகவும் இளநிலை ஆராய்ச்சி அலுவலர் முனைவர் ம. தமிழ்வாணன் இணை ஒருங்கிணைப்பாளராகவும் செயல்பட்டனர்.

**பயிலரங்கம் 6**

## செவ்வியல் தமிழின் தொல்லெழுத்தியல் பயிலரங்கு

உலகின் தொன்முது நாகரிகங்களில் ஒன்று என்னும் சிறப்புடையது சிந்துவெளி நாகரிகம். அது தமிழிய நாகரிகமே எனப் பின்லாந்து அறிஞர் அஸ்கோ பர்போலோ, ஐராவதம் மகாதேவன் போன்றோர் உலக அரங்கில் நிலைநாட்டியுள்ளனர். மூன்று தமிழ்ச்சங்க வரலாற்றின்படி முதல் தமிழ்ச்சங்க காலத்தில் ஓவிய எழுத்தும் இரண்டாம் தமிழ்ச்சங்க காலத்தில் சிந்துவெளி எழுத்தும் மூன்றாம் தமிழ்ச்சங்க காலத்தில் தமிழி எழுத்தும் அதிலிருந்து வட்டெழுத்தும் சோழர் காலத்தில் இன்றைய தமிழ் எழுத்துமாக வளர்ந்த தமிழ் எழுத்துகளின் வளர்ச்சி வரலாறு தமிழ் எழுத்துகளின் சங்கிலித் தொடர் போன்று தொடர்பறாத 5000 ஆண்டுகாலத் தமிழ் எழுத்தின் தொன்மையைப் புலப்படுத்துகிறது. மிகத் தொன்மையான சிந்துவெளி எழுத்து தமிழ்நாட்டில் செம்பியன் கண்டியூர், கீழடி ஆகிய இடங்களில் கிடைத்துள்ளது. ஆந்திர, கேரள மாநிலங்களிலும் இலங்கை ஆகிய இடங்களிலும் சிந்துவெளி எழுத்தும் தமிழி எழுத்துகளும் கலந்த நிலையில் தொல்லியல் தரவுகள் கண்டறியப்பட்டுள்ளன. ஆகவே சிந்துவெளி எழுத்தும் தமிழி எழுத்தும் இந்தியாவின் ஒரே பொது எழுத்தாக (*Pan Indian Script*) நின்று நிலவின என்பது இதனால் நன்கு உறுதிப்படுகிறது.






தமிழ் மொழியின் எழுத்தியல் வரலாறு பண்டைய காலந்தொட்டு இடைக்காலம் வரை கண்ணெழுத்து, கோலெழுத்து முறையில் எழுதப் பெற்றதைத் தொல்காப்பியம் குறிப்பிடுகிறது. நடுகற்கள், ஓலைச்சுவடி, தாட்சுவடி, தேக்குமரம், சுட்ட களிமண் பலகைகள், பானைகள், செப்புத்தகடுகள், தோல் ஆவணங்கள், கல்வெட்டுகள் ஆகிய பல்வேறு எழுதுபொருட்களில் காலந்தோறும் தமிழ் எழுத்துகள் எழுதப்பெற்று வந்துள்ளன. தமிழ் எழுத்தியல் வரலாற்றில் எழுத்து, அதன் ஆக்கம், காலந்தோறும் நிகழ்ந்த வரிவடிவ மாற்றம், எழுதும் வகைமை, எழுதுபொருட்களின் வகைப்பாடு, எழுத்தர்கள், சொல், சொல்லாக்கம், பொருண்மை, அதன் மாறுபாடுகள் ஆகிய கருத்தியல்களைப் பன்முக நோக்கில் ஆய்ந்து செவ்வியல் தமிழின் எழுத்து வரலாற்றோடு சொற்பொருண்மையின் விழுமியங்களை எடுத்துரைக்கும் நோக்கில் “செவ்வியல் தமிழின் தொல்லெழுத்தியல் பயிலரங்கு” என்னும் பத்து நாள் பயிலரங்கம் 06.03.2024 முதல் 15.03.2024 வரை செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனத்தில் நடைபெற்றது. இருபத்தைந்து ஆய்வாளர்கள் பங்கேற்ற இப்பயிலரங்கின் முப்பத்தெட்டு அமர்வுகளிலும் பல்வேறு பரந்துபட்ட ஆய்வுப்பரப்பில் துறைசார் அறிஞர்கள் ஆய்வுரை வழங்கினர்.

பயிலரங்கின் தொடக்க விழாவிலும் நிறைவு விழாவிலும் நிறுவனத்தின் இயக்குநர் பேராசிரியர் இரா. சந்திரசேகரன், பதிவாளர் முனைவர் ரெ. புவனேஸ்வரி ஆகியோர் முறையே தலைமையுரையும் வாழ்த்துரையும் வழங்கினர். தமிழ்நாடு அரசின் செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்ட மேனாள் இயக்குநர் பேராசிரியர் இரா. மதிவாணன் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டு தொடக்க விழாவிலும், புதுச்சேரி மொழியியல் பண்பாட்டு ஆராய்ச்சி நிறுவன மேனாள் இயக்குநர் பேராசிரியர் ப. மருதநாயகம் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டு நிறைவு விழாவிலும் சிறப்புரை ஆற்றினர். இப்பயிலரங்கில் நிறுவன இளநிலை ஆய்வு வளமையர் திருமதி ம. தாமரைச்செல்வி ஒருங்கிணைப்பாளராகவும் இளநிலை ஆராய்ச்சி அலுவலர் முனைவர் த. சரவணன் இணை ஒருங்கிணைப்பாளராகவும் செயல்பட்டனர்.

**பயிலரங்கம் 7**

## மலேசியத் தமிழ்ப் பேராசிரியர்களுக்குத் தமிழ்ச் செவ்விலக்கியங்களின் மொழிபெயர்ப்புக் குறித்த பயிலரங்கம்






மலேசியத் தமிழ்ப் பேராசிரியர்களுக்குத் தமிழ்ச் செவ்விலக்கியங்களின் மொழிபெயர்ப்புக் குறித்த ஐந்து நாள் பயிலரங்கம் 06.04.2024 முதல் 10.04.2024 வரை செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனத்தில் நடைபெற்றது. மலேசியப் பல்கலைக்கழகங்களிலிருந்து இருபத்தெட்டு தமிழ்ப் பேராசிரியர்கள் பங்கேற்ற இப்பயிலரங்கின் பதினெட்டு அமர்வுகளிலும் துறைசார் அறிஞர்கள் ஆய்வுரை வழங்கினர்.

பயிலரங்கின் தொடக்க விழாவிலும் நிறைவு விழாவிலும் நிறுவனத்தின் இயக்குநர் பேராசிரியர் இரா. சந்திரசேகரன், பதிவாளர் முனைவர் ரெ. புவனேஸ்வரி ஆகியோர் முறையே தலைமையுரையும் வாழ்த்துரையும் வழங்கினர். மலேசியா, மலாயாப் பல்கலைக்கழக மொழிகள் மற்றும் மொழியியல் புலத்தின் முதுநிலை விரிவுரையாளர் முனைவர் செல்வஜோதி இராமலிங்கம் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டு தொடக்க விழாவிலும், மலேசியா, சுலுத்தான் இதுரீசு கல்வியியல் பல்கலைக்கழக இணைப்பேராசிரியர் முனைவர் மனோன்மணி தேவி முத்து. ஆறு. அண்ணாமலை சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டு நிறைவு விழாவிலும் சிறப்புரையாற்றினர். இப்பயிலரங்கின் ஒருங்கிணைப்பாளராக நிறுவன ஆராய்ச்சி அலுவலர் முனைவர் கு. ஜெயகுமாரியும் இணை ஒருங்கிணைப்பாளராக இளநிலை ஆராய்ச்சி அலுவலர் முனைவர் மா. சுசிலாவும் செயல்பட்டனர்.

**பயிலரங்கம் 8**

## தமிழக ஓவிய மரபுகள்

‘ஓவியம்’ ஏனைய கலை வடிவங்களுள்ளும் ஒப்பற்ற சிறப்புடையது. கலைகளின் அரசனாகப் போற்றப்படுவது. மனித நாகரிகத்தின் மிகத் தொடக்கக் காலத்திலேயே, தன்னைச் சூழ்ந்திருக்கும் பொருள்களின் மீது தனக்கு விருப்பமானவற்றை, இயற்கை வண்ணங்களைக் கொண்டு வரைந்து அவற்றை அழகியல் நிறைந்த கலைப்பொருளாக்கியுள்ளான் மனிதன். வரலாற்றுக் காலத்திற்கு முன்னரே தான் தங்கியிருந்த இயற்கைக் குகைத்தளங்களில், அன்றாடம் கண்டுணர்ந்தவற்றை இயற்கை வண்ணங்களைக் கொண்டு மனிதன் வரைந்து வைத்திருந்தான். கட்டடச் சுவர்களில் தீட்டப்பட்டிருந்த ஓவியங்கள் குறித்த சங்க இலக்கியப் பதிவுகள் மிகவும் கவனத்திற்குரியனவாகும். கல்லில் சிலையாக வடித்து வழிபடுவதற்குமுன் தெய்வ உருவங்கள் ஓவியங்களாகத் தீட்டி வழிபடப்பட்டதைத் தொல்லியல் சான்றுகள் உணர்த்துகின்றன. பல்லவர், பாண்டியர் காலத்தில் செழித்த சுவரோவிய மரபு, இராசராச சோழன் காலத்தில் புகழின் உச்சம் அடைந்தது. தமிழகத்தின் பல பகுதிகளிலுள்ள ஓவியங்களில் பெரும்பாலானவை இழக்கப்பட்டுவிட்டன. இருப்பவற்றைப் பேணிக் காப்பது இன்றியமையாததாகும். இவற்றின் தேவையை உணரும் வகையில் “தமிழக ஓவிய மரபுகள்” என்னும் ஏழு நாள் பயிலரங்கம் 24.04.2024 முதல் 30.04.2024 வரை செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனத்தில் நடைபெற்றது. முப்பது ஆய்வாளர்கள் பங்கேற்ற இப்பயிலரங்கின் இருபத்தாறு அமர்வுகளிலும் பல்வேறு பரந்துபட்ட ஆய்வுப்பரப்பில் துறைசார் அறிஞர்கள் ஆய்வுரை வழங்கினர்.



பயிலரங்கின் தொடக்க விழாவிலும் நிறைவு விழாவிலும் நிறுவனத்தின் இயக்குநர் பேராசிரியர் இரா. சந்திரசேகரன், பதிவாளர் முனைவர் ரெ. புவனேஸ்வரி ஆகியோர் முறையே தலைமை உரையும் வாழ்த்துரையும் வழங்கினர். தொடக்க விழாவில் சிறப்பு விருந்தினர்களாகக் கலந்துகொண்ட ஓவியர் திரு. டிராட்ஸ்கி மருது கருத்துரையும் எழுத்தாளர் திரு. எஸ். ராமகிருஷ்ணன் சிறப்புரையும் சென்னைக் கிறித்துவக் கல்லூரியின் மேனாள் தமிழ்ப் பேராசிரியர் முனைவர் சா. பாலுசாமி நோக்கவுரையும் ஆற்றினர். நிறைவு விழாவில் இந்தியத் தொல்லியல் துறையின் மேனாள் கண்காணிப்பாளர் முனைவர் தியாக. சத்தியமூர்த்தி சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டு சிறப்புரையாற்றினார். இப்பயிலரங்கில் நிறுவன இளநிலை ஆராய்ச்சி அலுவலர் முனைவர் இரா. வெங்கடேசன் ஒருங்கிணைப்பாளராகவும் ஆராய்ச்சி அலுவலர் முனைவர் இரா. அருள்மணி இணை ஒருங்கிணைப்பாளராகவும் செயல்பட்டனர்.

**பயிலரங்கம் 9**

## மக்கள் தொகைக் கணக்கெடுப்பு அலுவலர்களுக்கு அடிப்படைத் தமிழ்க் கற்பித்தல்





மக்கள் தொகைக் கணக்கெடுப்பு அலுவலர்களுக்கு அடிப்படைத் தமிழ்க் கற்பிக்கும் நோக்கில் பதினான்கு நாள் பயிலரங்கம் 01.05.2024 முதல் 14.05.2024 வரை செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனத்தில் நடைபெற்றது. சென்னையிலுள்ள மத்திய அரசின் மக்கள் தொகைக் கணக்கெடுப்பு அலுவலகத்திலிருந்து பதினாறு அலுவலர்கள் பங்கேற்ற இப்பயிலரங்கின் ஐம்பத்துநான்கு அமர்வுகளிலும் துறைசார் அறிஞர்கள் அடிப்படைத் தமிழ் குறித்த ஆய்வுரைகளை வழங்கினர்.

பயிலரங்கின் தொடக்க விழாவிலும் நிறைவு விழாவிலும் நிறுவனத்தின் இயக்குநர் பேராசிரியர் இரா. சந்திரசேகரன், பதிவாளர் முனைவர் ரெ.புவனேஸ்வரி ஆகியோர் முறையே தலைமையுரையும் வாழ்த்துரையும் வழங்கினர். இந்திய அரசின் உள்துறை அமைச்சகத்தின் இயக்குநரும் தமிழ்நாடு, மக்கள் தொகைக் கணக்கெடுப்பு இயக்குநரகத்தின் இயக்குநருமான திரு. சஜ்ஜன்சிங் ஆர் சவான், இ.ஆ.ப., சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டு தொடக்க விழாவிலும், தமிழ்நாடு, மக்கள் தொகைக் கணக்கெடுப்பு இயக்குநரகத்தின் இணை இயக்குநர் திரு. சு. சின்னத்துரை சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டு நிறைவு விழாவிலும் சிறப்புரையாற்றினர். இந்தி மொழியறிஞர் முனைவர் மா. கோவிந்தராஜன் பயிலரங்கத் தொடக்க விழாவில் நோக்கவுரையும் நிறைவு விழாவில் நிறைவுரையும் ஆற்றினார். இப்பயிலரங்கின் ஒருங்கிணைப்பாளராக நிறுவன ஆராய்ச்சி அலுவலர் முனைவர் கு. ஜெயகுமாரியும் இணை ஒருங்கிணைப்பாளராக இளநிலை ஆராய்ச்சி அலுவலர் முனைவர் மா. சுசிலாவும் செயல்பட்டனர்.

**பயிலரங்கம் 10**

## தமிழ்ச் செவ்விலக்கியங்களில் மகளிரின் பன்முக ஆளுமை

பண்டைத் தமிழகத்தில் பெண்கள் தனித்துவத்தோடு வாழ்ந்திருந்ததைத் தமிழ்ச் செவ்விலக்கியங்கள் சிறப்பாகப் பதிவு செய்திருக்கின்றன. பெண்ணுரிமை பேணப்பட்ட அக்காலத்தில் பெண்ணடிமைத்தனம் தோன்றியிருக்கவில்லை. மகளிருக்கான பொற் காலமாகப் பழந்தமிழ்ச் சமூகம் விளங்கியதைச் சங்க இலக்கியம் தொடங்கி காப்பியக் காலம் வரை தோன்றிய தமிழ்ச் செவ்விலக்கியங்களின் பதிவுகள் வெளிப்படுத்துகின்றன. பெண் குழந்தைப் பிறப்பு மகிழ்ச்சிக்குரிய நிகழ்வாகக் கருதப்பெற்றதைச் சங்க இலக்கியங்கள் உறுதி செய்கின்றன. பண்டைச் சமூகத்தில் பெண் கல்வி சிறந்திருந்த பான்மையினையும் தமிழ்ச் செவ்விலக்கியங்கள் சுட்டிச் சென்றுள்ளன. சங்க கால இலக்கியங்களில் நாற்பத்தொரு பெண் ஆளுமைகள் தம் கவிதைகளை வழங்கியிருக்கின்றனர். தமிழ்ச் செவ்விலக்கியங்கள் மகளிரின் வாழ்வியல், பொருளாதாரம், கல்வி, சமூகத்தகுதி, பங்களிப்பு எனப் பல நிலைகளில் தரவுகளைப் பதிவு செய்திருக்கின்றன. அப்பதிவுகளின்வழி மகளிரின் கல்வி, சிந்தனை, ஆளுமை, பல்துறை அறிவு ஆகியவற்றினை ஆய்வு மாணவியருக்கும் பேராசிரியைகளுக்கும் எடுத்துரைக்கும் வகையில் “தமிழ்ச் செவ்விலக்கியங்களில் மகளிரின் பன்முக ஆளுமை” என்னும் ஏழு நாள் பயிலரங்கம் 07.05.2024 முதல் 13.05.2024 வரை செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனத்தில் நடைபெற்றது. இருபத்தைந்து ஆய்வாளர்கள் பங்கேற்ற இப்பயிலரங்கின் இருபத்தாறு அமர்வுகளிலும் பல்வேறு பரந்துபட்ட ஆய்வுப்பரப்பில் துறைசார் அறிஞர்கள் ஆய்வுரை வழங்கினர். இப்பயிலரங்கின் மூன்றாம் நாள் (09.05.2024) பிற்பகல் அமர்வில் சிலப்பதிகாரத் தோற்பாவைக் கூத்து நிகழ்த்தப்பெற்றது.






பயிலரங்கின் தொடக்க விழாவிலும் நிறைவு விழாவிலும் நிறுவனத்தின் இயக்குநர் பேராசிரியர் இரா. சந்திரசேகரன், பதிவாளர் முனைவர் ரெ.புவனேஸ்வரி ஆகியோர் முறையே தலைமையுரையும்



வாழ்த்துரையும் வழங்கினர். செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனத் துணைத்தலைவர், பேராசிரியர் மருத்துவர் சுதா சேஷய்யன் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டு தொடக்க விழாவிலும், பேச்சாளர் மற்றும் எழுத்தாளர் திருமதி பாரதி பாஸ்கர் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டு நிறைவு விழாவிலும் சிறப்புரையாற்றினர். இப்பயிலரங்கின் ஒருங்கிணைப்பாளர்களாக நிறுவன ஆராய்ச்சி அலுவலர் முனைவர் ந. தேவி, இளநிலை ஆராய்ச்சி அலுவலர் முனைவர் ந. பெரியசாமி, நிரலாளர்கள் திரு. சு. கார்த்திகேயன், முனைவர் இரா. அகிலன் ஆகியோர் செயல்பட்டனர்.

**பயிலரங்கம் 11**

## தமிழ் மருத்துவ மரபுகள்




உலகெங்கினும் வழங்கிவருகின்ற ஆயிரக்கணக்கான மொழிகளில் மிகப் பழைமையான மூல மொழிகளாக விளங்கக்கூடிய சிலவற்றில் செம்மொழித் தமிழிற்குத் தனித்தன்மை வாய்ந்த சிறப்புகள் பலவுள. அவற்றில் தமிழுக்கே உரித்தான துறைகளாகத் தமிழ் வானியல் மரபு, தமிழ்க் கணிய மரபு, தமிழ் மெய்யியல் மரபு, தமிழ் வேளாண்மை மரபு, தமிழ் மருத்துவ மரபு, தமிழ் நடன மரபு, தமிழிசை மரபு, தமிழ்க் கட்டடக் கலை மரபு என்பனவாக அவை நீளும். மேற்கண்ட சிறப்பிற்குரிய மரபுகளில் மாந்த இனத்தின் அகப்புற நலவாழ்விற்கும் போற்றுதலுக்கும் உரியதாக விளங்குவது தமிழ் மருத்துவ மரபாகும். உலகில் இன்றளவும் மரபு அறுபடாமல் வழக்கில் உள்ள மருத்துவ முறைகளில் தமிழ் மருத்துவமும் ஒன்று. உலகில் வேறெந்தத் தொன்மையான மருத்துவ முறைகளிலும் காணப்படாத இரசவாதம், பற்பம், பாசாணம், செந்தூரம் போன்ற மருந்தியல் முறைகள் தமிழ் மருத்துவத்தில் மட்டுமே உள்ளன. வைத்தியம், வாதம், யோகம், ஞானம் என்னும் வகைமைகளைக் கொண்ட தமிழ் மருத்துவ மரபுகளின் தனித்தன்மையை ஆய்வு நோக்கில் சித்த மருத்துவ மாணவர்களுக்கு எடுத்துரைக்கும் வகையில் ‘தமிழ் மருத்துவ மரபுகள்’ என்னும் பத்து நாள் பயிலரங்கம் 13.05.2024 முதல் 22.05.2024 வரை செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனத்தில் நடைபெற்றது. இருபத்தொன்பது முதுநிலைச் சித்த மருத்துவ மாணவர்கள் பங்கேற்ற இப்பயிலரங்கின் முப்பத்தெட்டு அமர்வுகளிலும் பல்வேறு பரந்துபட்ட ஆய்வுப்பரப்பில் துறைசார் அறிஞர்கள் ஆய்வுரை வழங்கினர்.

பயிலரங்கின் தொடக்க விழாவிலும் நிறைவு விழாவிலும் நிறுவனத்தின் இயக்குநர் பேராசிரியர் இரா. சந்திரசேகரன், பதிவாளர் முனைவர் ரெ. புவனேஸ்வரி ஆகியோர் முறையே தலைமையுரையும் வாழ்த்துரையும் வழங்கினர். சென்னை, தேசிய சித்த மருத்துவ நிறுவனத்தின் இயக்குநர், பேராசிரியர் மருத்துவர் இரா. மீனாகுமாரி சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டு தொடக்க விழாவிலும், சென்னை, இந்திய மருத்துவம் மற்றும் ஓமியோபதித் துறையின் ஆணையாளர் திருமதி மைதிலி கே. ராஜேந்திரன், இ.ஆ.ப., சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டு நிறைவு விழாவிலும் சிறப்புரையாற்றினர். இப்பயிலரங்கின் நிறைவு விழாவில் திருக்குறளின் கடவுள் வாழ்த்து அதிகாரத்தின் பத்துப் பாடல்களுக்குத் ‘‘திருக்குறள் யோக நடனம்’’ என்ற ஆடற் கலை நிகழ்ச்சியைப் பயிற்சிச் சித்த மருத்துவர் செல்வி ஜி. திவ்யா நிகழ்த்தினார்.



இப்பயிலரங்கில் நிறுவனத் தரவு உள்ளீட்டாளர் திரு. தி. ஞா. அருள்ஒளி ஒருங்கிணைப்பாளராகவும் இளநிலை ஆராய்ச்சி அலுவலர் முனைவர் த. சரவணன் இணை ஒருங்கிணைப்பாளராகவும் செயல்பட்டனர்.

**பயிலரங்கம் 12**

## தமிழ்ச் செவ்விலக்கிய மரபில் சேயோன்





உலக மாந்தர் இனங்களில் தொன்மையும் தனித்தன்மையும் பெற்றவர்களுள் தமிழர் இனமும் ஒன்றாகும். தமிழர்களின் வாழ்வியல் முறையானது இயற்கையோடு இயைந்ததாகும். தமிழர்கள் தாம் வாழும் நிலப்பரப்பினை நானிலமாகப் பிரித்துத் தம் நில அமைப்பிற்கேற்ப கால்நடை வளர்ப்பு, தேனெடுத்தல், பயிரிடுதல், மீன்பிடித்தல் என வாழ்வியல் சூழலை அமைத்து, இயற்கையோடு தங்களை இணைத்துக் கொண்டு வாழ்ந்தனர். இவ்வாறு தமிழர்களின் பன்னெடுங்கால வாழ்வியல் தொடர்ச்சியின் விளைவாகத் தோன்றிய இலக்கண இலக்கியங்களின் வாயிலாக அவர்களின் பண்பாடு, நாகரிகம், வாழ்வியல் போன்றவற்றை அறிந்து கொள்ளலாம். தமிழில் கிடைத்துள்ள முதல் இலக்கண நூலான தொல்காப்பியம் மாயோன், சேயோன், வேந்தன், வருணன் என்று நால்வகைத் தெய்வங்களைக் குறிப்பிடுகிறது. இவற்றுள் மலையும் மலைசார்ந்த இடமான குறிஞ்சி நிலத்திற்குரிய தெய்வமாகச் 'சேயோன்' சிறப்பிக்கப்படுகிறார். தமிழ் இலக்கியப் பரப்பில் குறிஞ்சி நிலத் தெய்வமான சேயோன், 'முருகு' என்னும் பெயரில் சங்க இலக்கியங்களில் பெரும்பான்மையான இடங்களில் சுட்டப்படுகிறார். தமிழ் செவ்விலக்கியங்களான அகநானூறு, புறநானூறு, பரிபாடல், நற்றிணை, ஐங்குறுநூறு, திருமுருகாற்றுப்படை, மலைபடுகடாம் போன்ற இலக்கியங்களில் சேயோனைப் பற்றிய குறிப்புகள் விரவிக் கிடக்கின்றன. தொல்காப்பியத்தில் தொடங்கிய சேயோன் வழிபாடு, அதன் தொடர்ச்சி, தனித்தன்மை ஆகியவற்றை ஆய்வு மாணவர்களுக்கு எடுத்துரைக்கும் நோக்கில் 'தமிழ்ச் செவ்விலக்கிய மரபில் சேயோன்' என்னும் ஏழு நாள் பயிலரங்கம் 15.05.2024 முதல் 21.05.2024 வரை செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனத்தில் நடைபெற்றது. இருபத்தைந்து ஆய்வாளர்கள் பங்கேற்ற இப்பயிலரங்கின் இருபத்தாறு அமர்வுகளிலும் பல்வேறு பரந்துபட்ட ஆய்வுப்பரப்பில் துறைசார் அறிஞர்கள் ஆய்வுரை வழங்கினர்.

பயிலரங்கின் தொடக்க விழாவிலும் நிறைவு விழாவிலும் நிறுவனத்தின் இயக்குநர் பேராசிரியர் இரா. சந்திரசேகரன், பதிவாளர் முனைவர் ரெ.புவனேஸ்வரி ஆகியோர் முறையே தலைமையுரையும் வாழ்த்துரையும் வழங்கினர். சென்னை, அரும்பாக்கம், துவாரகதாஸ் கோவர்தன்தாஸ் வைணவக் கல்லூரியின் தமிழ்த் துறைத் தலைவர் முனைவர் ப. முருகன் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டு தொடக்க விழாவில் சிறப்புரையாற்றினார். இப்பயிலரங்கில் நிறுவன ஆராய்ச்சி அலுவலர் முனைவர் இரா. அருள்மணி ஒருங்கிணைப்பாளராகவும் இளநிலை ஆராய்ச்சி அலுவலர் முனைவர் ம. தமிழ்வாணன் இணை ஒருங்கிணைப்பாளராகவும் செயல்பட்டனர்.

**பயிலரங்கம் 13**

## தென்னகப் பழங்குடி மொழிகளில் பழந்தமிழ்ச் சொற்கள்

தமிழ் மொழியானது தென்னிந்தியாவில் பேசப்படும் மொழிகளுக்கு மட்டுமின்றி இந்திய நிலப்பரப்பிற்கு வெளியே பேசப்படும் 'பிராகுயி' போன்ற மொழிகளுக்கும் மூலமாக இருப்பதை ஆய்வு முடிவுகள் வெளிப்படுத்துகின்றன. பல்வேறு மொழியியல் அறிஞர்களின் களஆய்வு முயற்சிகளால் தென்னிந்தியப் பழங்குடி மொழிகளாக முள்ளுக்குறும்பர் மொழி, பெட்டக்குறும்பர் மொழி, காட்டுநாயக்கர் மொழி, பாலுக்குறும்பர் மொழி, ஊராளி மொழி, காணிக்காரர் மொழி, கதபா மொழி, காடர் மொழி, பணியர் மொழி, சோளிகர் மொழி, எரவள்ளா மொழி, கொரகா மொழி, இருளர் மொழி, நரிக்குறவர் மொழி, கூய் மொழி போன்றவை இனங்காணப்பட்டுள்ளன. தொன்மையான தமிழ் மொழியின் பழஞ்சொற்கள் பலவும் தமிழகப்







பழங்குடிச் சமூகத்தில் இன்றும் வழக்கிலிருக்கின்றன. பழங்குடி மக்களின் பண்பாடு, நாட்டுப்புறக் கலைகள் மற்றும் வாழ்வியல் முறைகளில் பண்டைய தமிழ்ச் சொற்கள் வேரூன்றியுள்ளன. பழங்குடிச் சமூகம் சார்ந்த வரலாறு, அரசியல், சமயம், தத்துவம், இயல், இசை, நாடகம், கலைகள், ஓவியம், சிற்பம், கட்டடக்கலை, விளையாட்டு, உணவு, உடைகள், பொழுதுபோக்குகள், சடங்குகள் ஆகியவற்றில் வழங்கப்படும் வழக்குச் சொற்களில்பழந்தமிழ்ச்சொற்கள்பலகாணப்படுகின்றன. இவற்றைக் கண்டறியும் நோக்கில் "தென்னகப் பழங்குடி மொழிகளில் பழந்தமிழ்ச் சொற்கள்" என்னும் பத்து நாள் பயிலரங்கம் 19.06.2024 முதல் 28.06.2024 வரை செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனத்தில் நடைபெற்றது. இருபத்தேழு ஆய்வாளர்கள் பங்கேற்ற இப்பயிலரங்கின் முப்பத்தெட்டு அமர்வுகளிலும் பல்வேறு பரந்துபட்ட ஆய்வுப்பரப்பில் துறைசார் அறிஞர்கள் ஆய்வுரை வழங்கினர்.

பயிலரங்கின் தொடக்க விழாவிலும் நிறைவு விழாவிலும் நிறுவனத்தின் இயக்குநர் பேராசிரியர் இரா. சந்திரசேகரன், பதிவாளர் முனைவர் ரெ. புவனேஸ்வரி ஆகியோர் முறையே தலைமையுரையும் வாழ்த்துரையும் வழங்கினர். நெல்லூர், செம்மொழித் தெலுங்கு உயராய்வு மைய இயக்குநர் பேராசிரியர் மா. சம்பத்குமார் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டு தொடக்க விழாவில் சிறப்புரையாற்றினார். இப்பயிலரங்கில் நிறுவன இளநிலை ஆராய்ச்சி அலுவலர்களான முனைவர் மு. செல்வதுரை ஒருங்கிணைப்பாளராகவும் முனைவர் வ. மாரியப்பன் இணை ஒருங்கிணைப்பாளராகவும் செயல்பட்டனர்.

**பயிலரங்கம் 14**

## செம்மொழித் தமிழ் இலக்கியங்களில் இயற்கைச் சூழல் சிந்தனைகள் – மரபும் நீட்சியும் (வானியல், நிலவியல், பொழுது மற்றும் சூழலியல்)






தமிழ்ச் செவ்விலக்கியங்களில் புலவர்களும் புரவலர்களும் ஐம்பூதங்களின் இயற்கை அமைப்புகள், இயக்கங்கள், செயல்பாடுகள், அவை சார்ந்த சிந்தனைகள் போன்றவற்றை அறிவியல் நுட்பத்தோடும், திணைசார் அறிவுத்திறத்தோடும் உணர்ந்து, பாடல் பாடியிருப்பது வியப்பிற்குரியது. தமிழிலக்கிய மரபில் இடம்பெற்றுள்ள இயற்கை சார்ந்த சிந்தனைகளையும் மரபுகளையும் அவற்றின் சமகால நீட்சிப் போக்குகளையும் வகைதொகைப்படுத்தி ஆராயும் நோக்கில் "செம்மொழித் தமிழ் இலக்கியங்களில் இயற்கைச் சூழல் சிந்தனைகள்" என்னும் பத்து நாள் பயிலரங்கம் 25.06.2024 முதல் 04.07.2024 வரை செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனத்தில் நடைபெற்றது. பல்வேறு பல்கலைக்கழகங்கள், கல்லூரிகளிலிருந்து நாற்பது ஆய்வாளர்கள் பங்கேற்ற

இப்பயிலரங்கின் முப்பத்தெட்டு அமர்வுகளிலும் பல்வேறு ஆய்வுப்பரப்பில் துறைசார் அறிஞர்கள் ஆய்வுரை வழங்கினர்.

பயிலரங்கின் தொடக்க விழாவிலும் நிறைவு விழாவிலும் நிறுவனத்தின் இயக்குநர் பேராசிரியர் இரா. சந்திரசேகரன், பதிவாளர் முனைவர் ரெ. புவனேஸ்வரி ஆகியோர் முறையே தலைமையுரையும் வாழ்த்துரையும் வழங்கினர். கோயம்புத்தூர், பாரதியார் பல்கலைக்கழக மொழியியல் துறையின் இந்தியச் சமூக அறிவியல்கள் ஆய்வுக் குழுவின் முதுநிலை ஆய்வுத் தகைஞர் முனைவர் சி. மகேசுவரன் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டு தொடக்க விழாவிலும், பெங்களூரு, கிறித்து நிகர்நிலைப் பல்கலைக்கழகத்தின் மதிப்புறு பேராசிரியர் பழனி. கிருஷ்ணசாமி சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டு நிறைவு விழாவிலும் சிறப்புரையாற்றினர். இப்பயிலரங்கில் நிறுவன இளநிலை ஆராய்ச்சி அலுவலர்களான முனைவர் அ. ஆரோக்கியதாசு ஒருங்கிணைப்பாளராகவும் முனைவர் சே. கரும்பாயிரம் இணை ஒருங்கிணைப்பாளராகவும் செயல்பட்டனர்.

**பயிலரங்கம் 15**

## தமிழ்ச் செவ்விலக்கிய மரபில் வேந்தன்

உலக மாந்தர் வரலாற்றில் சமவெளிப் பகுதிகளைக் கொண்ட ஆற்றங்கரைகளில் மனித நாகரிகம் தோன்றியது என்பது வரலாற்று ஆய்வாளர்களின் கருத்தாகும். நீர் நிலைகளின் அருகில் வாழத்தொடங்கிய மனித சமூகம் உணவு உற்பத்தி நிலைக்கு மாறி நிலவுடைமைச் சமுதாயமாக வளர்ச்சி பெற்றது. உற்பத்தித் திறனைப் பெருக்கிக்கொள்ள குளங்களையும் ஏரிகளையும் உருவாக்கித் தன் அடிப்படைத் தேவைகளையும் நிறைவு செய்துகொண்டது மனித சமூகம். இவ்வாறு இயற்கையோடு இயைந்த மக்களின் வாழ்வியல் அடிப்படையில் முல்லை, குறிஞ்சி, மருதம், நெய்தல் எனத் தொல்காப்பியர் நான்கு நிலப்பிரிவுகளைக் குறிப்பிட்டுள்ளார். இதில் வயலும் வயல் சார்ந்த இடமான மருத நிலத்தைக் குறிக்குமிடத்து "வேந்தன் மேய தீம்புனல் உலகம்" என்று வேந்தனை மருத நிலத் தலைவனாக முதன்மைப்படுத்துகிறார் தொல்காப்பியர். இதன் தொடர்ச்சியாக மருத நிலத் தலைவனான வேந்தன் பிற்காலத்தில் இந்திரனாக அழைக்கப்படுகிறான். அந்நாளில் இந்திரன் உலக உயிர்களை உயிர்ப்பிக்கும் மழைக்குரிய கடவுளாகச் சித்தரிக்கப்படுகிறான். இதன் தொடர்ச்சியாக மருத நில மக்கள் தாம் விளைவிக்கும் பயிர்களைக் காக்கும் கடவுளாகக் கருதி இந்திரனை வழிபட்டனர். தமிழர் வழிபாட்டு மரபில்





நெடுங்காலமாக இருந்துவரும் மருத நிலத் தெய்வமான இந்திரனின் சிறப்புப் பற்றி ஆய்வு மாணவர்களுக்கு விளக்கும் வகையில் "தமிழ்ச் செவ்விலக்கிய மரபில் வேந்தன்" என்னும் ஏழு நாள் பயிலரங்கம் 07.08.2024 முதல் 13.08.2024 வரை செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனத்தில் நடைபெற்றது. இருபத்தைந்து ஆய்வாளர்கள் பங்கேற்ற இப்பயிலரங்கின் இருபத்தாறு அமர்வுகளிலும் பல்வேறு பரந்துபட்ட ஆய்வுப்பரப்பில் துறைசார் அறிஞர்கள் ஆய்வுரை வழங்கினர்.

பயிலரங்கின் தொடக்க விழாவிலும் நிறைவு விழாவிலும் நிறுவனத்தின் இயக்குநர் பேராசிரியர் இரா. சந்திரசேகரன், பதிவாளர் முனைவர் ரெ. புவனேஸ்வரி ஆகியோர் முறையே தலைமையுரையும் வாழ்த்துரையும் வழங்கினர். தொல்லியல் அறிஞர் திரு. ச. கிருஷ்ணமூர்த்தி சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டு தொடக்க விழாவில் சிறப்புரையாற்றினார். இப்பயிலரங்கில் நிறுவன ஆராய்ச்சி அலுவலர் முனைவர் இரா. அருள்மணி ஒருங்கிணைப்பாளராகவும் இளநிலை ஆராய்ச்சி அலுவலர் முனைவர் ம. தமிழ்வாணன் இணை ஒருங்கிணைப்பாளராகவும் செயல்பட்டனர்.

**பயிலரங்கம் 16**

## இந்தியக் கலை மரபுகள்

உலக நாடுகளுள் கலைகளுக்கும் கலாச்சாரத்திற்கும் புகழ்பெற்று விளங்கும் நாடாகத் திகழ்வது இந்தியாவாகும். இந்தியக் கலை மரபு பன்னெடுங்காலமாக ஒரு தலைமுறையிலிருந்து மற்றொரு தலைமுறைக்கு வழிவழியாகக் கையளிக்கப்பட்டு வருவதால் பல தனித்துவத் தன்மைகளுடன் சிறப்புற்று விளங்குகிறது. இந்தியாவிலுள்ள ஒவ்வொரு காலத் தலைமுறையும் குறிப்பிட்ட வரையறுக்கப்பட்ட பொருட்கள், தொழில்நுட்பத்தைப் பயன்படுத்திச் சிறந்த கலைப் படைப்புகளை உருவாக்கியது. இந்தக்







கலை வடிவங்கள் பயன்பாட்டுக் கலை, நாட்டுப்புறக் கலை, பழங்குடி கலை, கைவினைப்பொருட்கள், சடங்குக் கலை எனப் பன்முகத் தன்மையில் வளம்பெற்று விளங்குகின்றன. உலகக் கலை மரபுகளுள் இந்தியக் கலை மரபானது தனித்துவம் மிக்கதாகவும் பொதுமையான இயல்புகளைத் தன்னகத்தே கொண்டு விளங்குவதாகவும் காணப்படுகின்றது. மக்கள் வாழ்வினையும் சமயச் சார்பான முறைகளையும் ஒருங்கே இணைக்கின்ற வகையில் வளர்ச்சி பெற்றுச் சென்றதன் அடிப்படையில் கலை உலகில் தனக்கெனத் தனித்துவமான ஓர் இடத்தினை இந்தியக் கலை மரபுகள் பெற்று நிற்கின்றன. இவற்றைப் பேணிக்காப்பது மிகவும் இன்றியமையாததாகும். இந்தியக் கலை மரபுகளை ஆய்வாளர்களுக்கு எடுத்துரைக்கும் நோக்கில் “இந்தியக் கலை மரபுகள்” என்னும் ஏழு நாள் பயிலரங்கம் 24.09.2024 முதல் 30.09.2024 வரை செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனத்தில் நடைபெற்றது. முப்பது ஆய்வாளர்கள் பங்கேற்ற இப்பயிலரங்கின் இருபத்தாறு அமர்வுகளிலும் பல்வேறு பரந்துபட்ட ஆய்வுப்பரப்பில் துறைசார் அறிஞர்கள் ஆய்வுரை வழங்கினர்.

பயிலரங்கின் தொடக்க விழாவிலும் நிறைவு விழாவிலும் நிறுவனத்தின் இயக்குநர் பேராசிரியர் இரா. சந்திரசேகரன், பதிவாளர் முனைவர் ரெ. புவனேஸ்வரி ஆகியோர் முறையே தலைமையுரையும் வாழ்த்துரையும் வழங்கினர். தொடக்க விழாவில் செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனத் துணைத்தலைவர் பேராசிரியர் மருத்துவர் சுதா சேஷய்யன் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டு “தமிழ்நாட்டுச் சமண ஓவியங்கள்” என்னும் நூலை வெளியிட்டுச் சிறப்புரை ஆற்றினார். செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவன மேனாள் துணைத்தலைவர் பேராசிரியர் தெ. ஞானசுந்தரம் நூலின் முதல்படியைப் பெற்றுப் பாராட்டுரை வழங்கினார். நூலாசிரியரும் சென்னைக் கிறித்துவக் கல்லூரியின் மேனாள் தமிழ்ப் பேராசிரியருமான முனைவர் சா. பாலுசாமி ஏற்புரை ஆற்றினார். இப்பயிலரங்கில் நிறுவன இளநிலை ஆராய்ச்சி அலுவலர் முனைவர் இரா. வெங்கடேசன் ஒருங்கிணைப்பாளராகவும் ஆராய்ச்சி அலுவலர் முனைவர் இரா. அருள்மணி இணை ஒருங்கிணைப்பாளராகவும் செயல்பட்டனர்.

**பயிலரங்கம் 17**

# இந்திய மொழிகளில் திருக்குறள் மொழிபெயர்ப்புகள்

இந்தியாவில் பல்வேறு மொழிகளைப் பேசும் மக்கள் வாழ்ந்து வருகின்றனர். அம்மக்களால் பேசப்படும் மொழிகளில் 22 மொழிகளை இந்திய அரசு பட்டியல் மொழிகளாக அங்கீகரித்துள்ளது. அம்மொழிகளில் சில மொழிகள் அந்தந்த மாநிலத்தில் மட்டுமல்லாமல் நாடு முழுவதும் உள்ள பகுதிகளில் பேசப்பட்டு வருகின்றன. இத்தகைய மொழிகளில் பல்வேறு இலக்கியங்கள் பல்வேறு காலகட்டங்களில் படைக்கப்பட்டு இன்றும் மக்களால் படிக்கப்பட்டு வருவதைக் காணலாம். அவ்வகையில் தமிழ் மொழியில் தொல்காப்பியம், சங்க இலக்கியம், திருக்குறள் உள்ளிட்ட பல்வேறு நூல்கள் பல்வேறு புலவர்களால் பல ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பே படைக்கப்பட்டு






அந்நூல்கள் இன்றும் வழக்கில் உள்ளன. இத்தகைய இலக்கியங்களில் சில, மனிதனைச் செம்மைப்படுத்தி உயர் பண்புமிக்கவர்களாக மாற்றமடைவதற்கான அனைத்துக் கூறுகளையும் தன்னகத்தே கொண்டுள்ளன. அவ்வரிசையில் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு படைக்கப்பட்ட திருக்குறள் மொழி, இனம், நாடு கடந்து இம்மானிடச் சமூகத்திற்காகப் படைக்கப்பட்ட ஒரு பேரிலக்கியமாகத் திகழ்கிறது. திருக்குறளின் மேன்மையான அறச்சிந்தனைகளை உலகின் பல்வேறு நாடுகளில் வாழும் மக்கள் படித்து அதன் உயரிய கருத்துகளை உள்வாங்கிக்கொண்டு, செம்மையான வாழ்க்கையினை நடத்திட வேண்டும் என்னும் உயரிய நோக்கத்தில் செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம் 25 இந்திய மொழிகளிலும் 8 உலக மொழிகளிலும் திருக்குறளை மொழிபெயர்த்து வெளியிட்டுள்ளது. திருக்குறளின் ஆங்கில மொழிபெயர்ப்பும், பதினெட்டு மொழிபெயர்ப்பாளர்களின் ஆங்கில மொழிபெயர்ப்புத் தொகுப்பும் நிறுவனத்தில் வெளியிடப்பட்டுள்ளது. மேலும், 32 இந்திய மொழிகளிலும் 9 உலக மொழிகளிலும் திருக்குறள் மொழிபெயர்க்கப்பட்டு வருகிறது.

இந்தியா முழுவதுமுள்ள பிற மொழிகளைத் தாய்மொழியாகக் கொண்டுள்ளவர்கள் திருக்குறளை விரும்பிக் கற்றும், திருக்குறள் கருத்துகளைப் போற்றியும் மகிழ்கின்றனர். திருக்குறளைக் கல்வியாளர்கள் மட்டுமல்லாது பொதுமக்களும் விரும்பி வாசிப்பதைக் காணமுடிகிறது. அவ்வாறு திருக்குறளில் ஆர்வமிக்க பிறமொழியாளர்களின் பார்வையில் திருக்குறள் எத்தகைய மாற்றத்தை ஏற்படுத்தியுள்ளது என்பதை அறியும் நோக்கில் "இந்திய மொழிகளில் திருக்குறள் மொழிபெயர்ப்புகள்" என்னும் ஏழு நாள் பயிலரங்கம் 03.10.2024 முதல் 09.10.2024 வரை செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனத்தில் நடைபெற்றது. இருபத்தைந்து ஆய்வாளர்கள் பங்கேற்ற இப்பயிலரங்கின் இருபத்தாறு அமர்வுகளிலும் பல்வேறு பரந்துபட்ட ஆய்வுப்பரப்பில் துறைசார் அறிஞர்கள் ஆய்வுரை வழங்கினர்.

பயிலரங்கின் தொடக்க விழாவிலும் நிறைவு விழாவிலும் நிறுவனத்தின் இயக்குநர் பேராசிரியர் இரா. சந்திரசேகரன் தலைமையுரை ஆற்றினார். பதிவாளர் முனைவர் ரெ. புவனேஸ்வரி தொடக்க விழாவிலும் நிறைவு விழாவிலும் முறையே அறிமுகயுரையும் வாழ்த்துரையும் வழங்கினார். செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனத் துணைத்தலைவர், பேராசிரியர் மருத்துவர் சுதா சேஷய்யன் தொடக்க விழாவில் வாழ்த்துரை வழங்கினார். உத்தரப்பிரதேச அரசு, பொது நிறுவனங்கள் துறையின் மேனாள் கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர் பி.வி. ஜெகன்மோகன், இ.ஆ.ப., சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டு தொடக்க விழாவில் சிறப்புரையாற்றினார். இந்தி மொழி வல்லுநர் முனைவர் மா. கோவிந்தராஜன் பயிலரங்கத் தொடக்க விழாவில் நோக்கவுரையும் நிறைவு விழாவில் நிறைவுரையும் ஆற்றினார். இப்பயிலரங்கின் ஒருங்கிணைப்பாளர்களாக நிறுவன இளநிலை ஆராய்ச்சி அலுவலர் முனைவர் வே. அழகுமுத்துவும் இந்தி மொழி வல்லுநர் முனைவர் மா. கோவிந்தராஜனும் செயல்பட்டனர்.

**பயிலரங்கம் 18**

# தென்னிந்திய மொழிகளுக் கிடையேயான இலக்கண உறவுகள்






பார் புகழும் பாரத நாடு பல மொழிகளின் உறைவிடமாக விளங்குகிறது. இப்பாரத நாட்டின் தென்னகத்தே சிறப்புற்று விளங்கும் மொழிகளுள் தமிழ்மொழி தொன்மையானதாகவும் உயர்தனிச் செம்மொழியாகவும் திகழ்கிறது. எண்ணிலடங்கா இலக்கியங்கள் இம்மொழியில் உள்ளன. அதேபோன்று இவ்விலக்கியங்களுக்கு வரையறைகளை வகுத்துக்கூறும் இலக்கண நூல்களும் இம்மொழியில் பல உண்டு. இத்தகைய தமிழ் மொழியின் இலக்கண நூல்களின் கருத்துகளோடு நெருங்கிய உறவுகள் கொண்ட மொழிகளான தெலுங்கு, கன்னடம், மலையாளம் ஆகியவற்றின் இலக்கண நூல்களின் கருத்துகளையும் ஒப்பிட்டு ஆராயும் நோக்கில் "தென்னிந்திய மொழிகளுக்கிடையேயான இலக்கண உறவுகள்" என்னும் ஏழு நாள் பயிலரங்கம் 05.11.2024 முதல் 11.01.2024 வரை செம்மொழித் தமிழாய்வு மத்திய

நிறுவனத்தில் நடைபெற்றது. முப்பத்தைந்து ஆய்வாளர்கள் பங்கேற்ற இப்பயிலரங்கின் இருபத்தாறு அமர்வுகளிலும் பல்வேறு பரந்துபட்ட ஆய்வுப்பரப்பில் துறைசார் அறிஞர்கள் ஆய்வுரை வழங்கினர்.

பயிலரங்கின் தொடக்க விழாவிலும் நிறைவு விழாவிலும் நிறுவனத்தின் இயக்குநர் பேராசிரியர் இரா. சந்திரசேகரன், பதிவாளர் முனைவர் ரெ. புவனேஸ்வரி ஆகியோர் முறையே தலைமையுரையும் வாழ்த்துரையும் வழங்கினர். சிதம்பரம், அண்ணாமலைப் பல்கலைக்கழக மொழியியல் உயராய்வு மைய இயக்குநர் பேராசிரியர் இரா. சரண்யா சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டு தொடக்க விழாவிலும், செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனத் துணைத்தலைவர், பேராசிரியர் மருத்துவர் சுதா சேஷய்யன் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டு நிறைவு விழாவிலும் சிறப்புரையாற்றினர். நிறுவன நிதிநல்கையுடன் பேராசிரியர் நடுவட்டம் கோபாலகிருஷ்ணன் மொழிபெயர்த்த சிலப்பதிகாரம், ஐங்குறுநூற்றின் மலையாள மொழிபெயர்ப்பு நூல்களையும், பேராசிரியர் ஜெயலலிதா மொழிபெயர்த்த தொல்காப்பியத்தின் கன்னட மொழிபெயர்ப்பு நூலையும் நிறுவனத் துணைத்தலைவர், பேராசிரியர் மருத்துவர் சுதா சேஷய்யன் வெளியிட நூலாசிரியர்கள் முதல்படியைப் பெற்றுக்கொண்டனர். இப்பயிலரங்கில் நிறுவன இளநிலை ஆராய்ச்சி அலுவலர்களான முனைவர் மு. செல்வதுரை ஒருங்கிணைப்பாளராகவும் முனைவர் வ. மாரியப்பன் இணை ஒருங்கிணைப்பாளராகவும் செயல்பட்டனர்.

**பயிலரங்கம் 19**

## தமிழ்ச் செவ்விலக்கிய மரபில் வருணன்

பழந்தமிழர்கள் இயற்கையை வழிபட்டு வந்ததன் தொடர்ச்சியாகத் தாங்கள் வாழ்ந்து வந்த நிலத்தின் அடிப்படையில் வழிபாட்டு முறைகளைக் கடைபிடிக்கத் தொடங்கினர். தமிழர் மரபில் குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என்னும் ஐந்திணைக்குரிய வழிபாடு இன்றியமையாததாகப் போற்றப்படுகிறது. திணைக்கடவுள்கள் பற்றி எடுத்துரைக்கும் தொல்காப்பியம், “வருணன் மேய பெருமணல் உலகமும்” என்று கூறுகிறது. நெய்தல் நிலத் தெய்வமான வருணன் குறித்துச் சங்க இலக்கியங்களில் குறிப்புகள் காணப்படுகின்றன. தமிழ் இலக்கியப் பரப்பில் கம்பராமாயணம் போன்ற காப்பியங்களிலும் பக்தி இலக்கியங்களிலும் நாட்டார் வழக்காறுகளிலும் வருணன் வழிபாடுகள் விரவிக் காணப்படுகின்றன. தமிழர் வழிபாட்டு மரபில் நெடுங்காலமாக இருந்துவரும் நெய்தல் நிலத் தெய்வமான வருணனின்






சிறப்புப் பற்றியும் நெய்தல் நில மக்கள் வாழ்வியல் பற்றியும் ஆய்வு மாணவர்களுக்கு விளக்கும் வகையில் ‘தமிழ்ச் செவ்விலக்கிய மரபில் வருணன்’ என்னும் ஏழு நாள் பயிலரங்கம் **06.11.2024** முதல் **12.11.2024** வரை செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனத்தில் நடைபெற்றது. முப்பத்தைந்து ஆய்வாளர்கள் பங்கேற்ற இப்பயிலரங்கின் இருபத்தாறு அமர்வுகளிலும் பல்வேறு பரந்துபட்ட ஆய்வுப்பரப்பில் துறைசார் அறிஞர்கள் ஆய்வுரை வழங்கினர்.

பயிலரங்கின் தொடக்க விழாவிலும் நிறைவு விழாவிலும் நிறுவனத்தின் இயக்குநர் பேராசிரியர் இரா. சந்திரசேகரன் தலைமையுரை ஆற்றினார். பதிவாளர் முனைவர் ரெ. புவனேஸ்வரி பயிலரங்கின் தொடக்க விழாவில் அறிமுக உரையும் நிறைவு விழாவில் வாழ்த்துரையும் வழங்கினார். செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனத் துணைத்தலைவர், பேராசிரியர் மருத்துவர் சுதா சேஷய்யன் பயிலரங்கின் தொடக்க விழாவில் வாழ்த்துரை வழங்கினார். வழக்குரைஞர் திரு. பால சீனிவாசன் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டு தொடக்க விழாவிலும், திண்டுக்கல், காந்திகிராம கிராமிய நிகர்நிலைப் பல்கலைக்கழகத் தமிழ், இந்திய மொழிகள் மற்றும் கிராமியக் கலைகள் புலப் பேராசிரியர் ஒ. முத்தையா சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டு நிறைவு விழாவிலும் சிறப்புரையாற்றினர். இப்பயிலரங்கில் நிறுவன இளநிலை ஆராய்ச்சி அலுவலர் முனைவர் ம. தமிழ்வாணன் ஒருங்கிணைப்பாளராகவும் ஆராய்ச்சி அலுவலர் முனைவர் இரா. அருள்மணி இணை ஒருங்கிணைப்பாளராகவும் செயல்பட்டனர்.

**பயிலரங்கம் 20**

# சித்த மருத்துவர்களுக்கான சுவடிப் பயிற்சி







தமிழ் மருத்துவ மரபுசார் அறிவானது அறிவர்களாகிய சித்தர் பெருமக்களாலும் அவர்களின் வழிவந்த சித்த மருத்துவர்களாலும் ஓலைச்சுவடிகளில் எழுதப்பட்டுக் காலங்காலமாகப் படியெடுக்கப்பட்டும் பேணப்பட்டும் வந்துள்ளது. இன்றளவும் இந்தியா முழுவதும் கிடைக்கின்ற ஓலைச்சுவடிகளில் தமிழ்ச் சுவடிகளே பெரும்பான்மை ஆகும். அவற்றுள்ளும் மருத்துவச் சுவடிகளின் எண்ணிக்கை அதிகம். இந்தத் தனித்தன்மை வாய்ந்த மருத்துவ ஓலைச்சுவடி அறிவைச் சித்த மருத்துவர்களுக்குப் பயிற்றுவிக்கும் நோக்கில் 'சித்த மருத்துவர்களுக்கான சுவடிப் பயிற்சி' என்னும் பத்து நாள் பயிலரங்கம் 19.11.2024 முதல் 28.11.2024 வரை செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனத்தில் நடைபெற்றது. முப்பது முதுநிலைச் சித்த மருத்துவ மாணவர்கள் பங்கேற்ற இப்பயிலரங்கின் முப்பத்தெட்டு அமர்வுகளிலும் பல்வேறு பரந்துபட்ட ஆய்வுப்பரப்பில் துறைசார் அறிஞர்கள் ஆய்வுரை வழங்கினர்.

பயிலரங்கின் தொடக்க விழாவிலும் நிறைவு விழாவிலும் நிறுவனத்தின் இயக்குநர் பேராசிரியர் இரா. சந்திரசேகரன், பதிவாளர் முனைவர் ரெ. புவனேஸ்வரி ஆகியோர் முறையே தலைமையுரையும் வாழ்த்துரையும் வழங்கினர். நாமக்கல், கந்தசாமிக் கண்டர் கல்லூரியின் மேனாள் முதல்வரும் சென்னை, அன்பு சித்த மருத்துவமனை மற்றும் நல மையத்தின் இயக்குநருமான பேராசிரியர் மருத்துவர் கோ. அன்புகணபதி சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டு தொடக்க விழாவிலும், செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனத் துணைத்தலைவர், பேராசிரியர் மருத்துவர் சுதா சேஷய்யன் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டு நிறைவு விழாவிலும் சிறப்புரையாற்றினர். இப்பயிலரங்கில் நிறுவனத் தரவு உள்ளீட்டாளர் திரு. தி.ஞா. அருள்ஒளி ஒருங்கிணைப்பாளராகவும் இளநிலை ஆராய்ச்சி அலுவலர் முனைவர் சே. கரும்பாயிரம் இணை ஒருங்கிணைப்பாளராகவும் செயல்பட்டனர்.

**பயிலரங்கம் 21**

# தமிழகக் கலைகள்: தொன்மையும் தொடர்ச்சியும்







தமிழர்களின் பண்பாட்டை அறியத் தமிழகக் கலைகள் முக்கியப் பங்காற்றுகின்றன. தமிழக மக்களின் வாழ்வியல், சூழல், வழிபாடுகள், சடங்குகள், மரபுகள் போன்றவற்றின் பண்பாட்டுக் கூறாகவும் கூட்டுப் படைப்பாகவும் தமிழகக் கலைகள் வடிவம் பெற்றுள்ளன. தமிழ்ச் செவ்விலக்கியங்களில் கலைகள் குறித்த பதிவுகள் மிகுந்து காணப்படுகின்றன. பாணர், விறலியர், கூத்தர் போன்றோர் கலைஞர்களாக

மட்டுமின்றிப் புலவர்களாகவும் வாழ்ந்துள்ளனர் என்பதற்குச் சங்க இலக்கியங்கள் சான்றுகளாகின்றன. எதிர்காலத் தலைமுறையினரிடையே கலைகள் குறித்த அறிவை வளர்த்தெடுக்கும் நோக்கில் "தமிழகக் கலைகள்: தொன்மையும் தொடர்ச்சியும்" என்னும் பத்து நாள் பயிலரங்கம் 20.11.2024 முதல் 29.11.2024 வரை செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனத்தில் நடைபெற்றது. பல்வேறு பல்கலைக்கழகங்கள், கல்லூரிகளிலிருந்து நாற்பது ஆய்வாளர்கள் பங்கேற்ற இப்பயிலரங்கின் இருபது அமர்வுகளில் பல்வேறு ஆய்வுப்பரப்பில் துறைசார் அறிஞர்கள் ஆய்வுரை வழங்கினர். மேலும், இப்பயிலரங்கில் தமிழக நாட்டுப்புற மரபுகளை மீட்டுருவாக்கம் செய்யும் நோக்கிலும் ஆவணப்படுத்தும் நோக்கிலும் பளியர் ஆட்டம், பம்பை ஆட்டம், உடுக்கை ஆட்டம், கைச்சிலம்பாட்டம், மரப்பாவைக் கூத்து, ஜிம்ளா மேளம், நளன் கும்மி, அண்ணன்மார் சாமி உடுக்கைப் பாட்டு, ராஜா ராணி ஆட்டம் (இணைப்புக் கலைகள்: நையாண்டி மேளம், மூக்காயி ஆட்டம், நல்லதங்காள் கூத்து, வெள்ளையம்மாள் கூத்து, குன்றவர் கூத்து, பேயாட்டம்), தோற்பாவைக்கூத்து ஆகிய தமிழக நாட்டுப்புறக் கலைகள் அரங்கேற்றம் செய்யப்பட்டன. பழந்தமிழ் இசைக்கருவிகளின் காட்சியும் கலைப் பயிற்சியும் பங்கேற்பாளர்களுக்கு அளிக்கப்பட்டது.

பயிலரங்கின் தொடக்க விழாவிலும் நிறைவு விழாவிலும் நிறுவனத்தின் இயக்குநர் பேராசிரியர் இரா. சந்திரசேகரன், பதிவாளர் முனைவர் ரெ. புவனேஸ்வரி ஆகியோர் முறையே தலைமையுரையும் வாழ்த்துரையும் வழங்கினர். வாலாஜாபேட்டை, அறிஞர் அண்ணா அரசு மகளிர் கலைக் கல்லூரியின் மேனாள் முதல்வர் பேராசிரியர் இரா. சீனிவாசன் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டு தொடக்க விழாவிலும், செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனத் துணைத்தலைவர், பேராசிரியர் மருத்துவர் சுதா சேஷய்யன் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டு நிறைவு விழாவிலும் சிறப்புரையாற்றினர். இப்பயிலரங்கில் நிறுவன இளநிலை ஆராய்ச்சி அலுவலர்களான முனைவர் அ. ஆரோக்கியதாசு ஒருங்கிணைப்பாளராகவும் முனைவர் சே. கரும்பாயிரம் இணை ஒருங்கிணைப்பாளராகவும் செயல்பட்டனர்.

> **கோட்டுப்பூப் போல மலர்ந்துபின் கூம்பாது**
> **வேட்டதே வேட்டதாம் நட்பாட்சி - தோட்ட**
> **கயப்பூப்போல் முன்மலர்ந்து பிற்கூம்பு வாரை**
> **நயப்பாரும் நட்பாரும் இல்.**
>
> *- நாலடியார் 215*

**பயிலரங்கம் 22**

# தமிழ்ச் செவ்விலக்கிய ஆய்வு நெறிமுறைகள்






செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனத்தின் நிதி நல்கையின்கீழ் முனைவர் பட்ட ஆய்வு உதவித்தொகை பெறும் முனைவர் பட்ட ஆய்வு மாணவர்களுக்கு ஆய்வு நெறிமுறைகள் குறித்து எடுத்துரைக்கும் நோக்கில் "தமிழ்ச் செவ்விலக்கிய ஆய்வு நெறிமுறைகள்" என்னும் பத்து நாள் பயிலரங்கம் 10.12.2024 முதல் 19.12.2024 வரை செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனத்தில் நடைபெற்றது. இருபத்தைந்து முனைவர் பட்ட ஆய்வு மாணவர்கள் பங்கேற்ற இப்பயிலரங்கின் முப்பத்தெட்டு அமர்வுகளிலும் துறைசார் அறிஞர்கள் ஆய்வுரை வழங்கினர்.

பயிலரங்கின் தொடக்க விழாவிலும் நிறைவு விழாவிலும் நிறுவனத்தின் இயக்குநர் பேராசிரியர் இரா. சந்திரசேகரன், பதிவாளர் முனைவர் ரெ. புவனேஸ்வரி ஆகியோர் முறையே தலைமையுரையும் வாழ்த்துரையும் வழங்கினர். செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனத் துணைத்தலைவர், பேராசிரியர் மருத்துவர் சுதா சேஷய்யன் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டு தொடக்க விழாவில் சிறப்புரையாற்றினார். இப்பயிலரங்கின் ஒருங்கிணைப்பாளராக நிறுவன ஆராய்ச்சி அலுவலர் முனைவர் கு. ஜெயகுமாரியும் இணை ஒருங்கிணைப்பாளராக இளநிலை ஆராய்ச்சி அலுவலர் முனைவர் மா. சுசிலாவும் செயல்பட்டனர்.

# மருத்துவ முகாம்





செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனத்தில் 02.05.2024 அன்று சென்னை, கிளெனீகல்ஸ் மருத்துவமனையின் கண் பரிசோதனை முகாமும் நரம்பியல் சிகிச்சை முறைகள் குறித்த விழிப்புணர்வு முகாமும் நடைபெற்றது. நிறுவன இயக்குநர் பேரா. இரா. சந்திரசேகரன் அவர்கள் மருத்துவ முகாமைத் தொடங்கி வைத்தார். இம்முகாமில் நிறுவனப் பதிவாளர் முனைவர் ரெ. புவனேஸ்வரி, நிதி அலுவலர் திரு. ஆ. குமரேசன், நிறுவனப் பணியாளர்கள் அனைவரும் கலந்துகொண்டனர்.














# ஒரு நாள் பயிலரங்குகள்

**பயிலரங்கம் 1**

## கல்வி நிறுவனங்களில் திருக்குறளின் விழுமியங்களைப் பரப்புதல்





செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனமும் புதுதில்லியிலுள்ள பாரத மொழிகளின் குழுவும் இணைந்து 22.06.2024 அன்று “கல்வி நிறுவனங்களில் திருக்குறளின் விழுமியங்களைப் பரப்புதல்” என்னும் பொருண்மையிலான பயிலரங்கைச் செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனத்தில் நடத்தின. இப்பயிலரங்கின் தொடக்க விழாவில் பாரத மொழிகளின் குழுவின் ஆலோசகர் திரு. பா.ஜா. சௌந்தரராஜன் வரவேற்புரை ஆற்றினார். செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவன இயக்குநர் பேராசிரியர் இரா. சந்திரசேகரன் தலைமையுரையாற்றினார். நிறுவனப் பதிவாளர் முனைவர் ரெ. புவனேஸ்வரி வாழ்த்துரை வழங்கினார். பாரத மொழிகளின் குழுத் தலைவர் பத்மஸ்ரீ முனைவர் சாமு கிருஷ்ண சாஸ்திரி அவர்கள் சிறப்புரையாற்றினார். அவ்வுரையில் அவர், பாரதப் பிரதமர் அவர்களின் விருப்பத்திற்கிணங்கப் பாரத நாடு முழுவதும் உள்ள அனைத்து மொழி பேசும் மக்களையும் திருக்குறள் கருத்துகள் மூலம் ஒன்றிணைக்க முடியும் என்றும், மொழிவாரியான வேறுபாடுகளைக் களைந்து நாம் அனைவரும் பாரதத் தாயின் தவப் புதல்வர்கள் என்ற ஒற்றுமையினை வலியுறுத்தும் வண்ணம் திருக்குறளையும் திருவள்ளுவரையும் தேசிய அளவில் அனைத்து நிலை மாணவர்களுக்கும் பரப்ப வேண்டும் என்றும் பேசினார். இந்நிகழ்ச்சியில் தமிழகம் முழுவதிலுமிருந்து திருக்குறளில் புலமைபெற்ற பல்துறை அறிஞர்கள் 38 பேர் பங்கேற்றனர். திருக்குறளை நாடு முழுவதும் மாணவர்களிடையே கொண்டு சேர்ப்பதற்கான வழி முறைகள் குறித்த பரிந்துரைகள் அவர்களிடமிருந்து பெறப்பட்டன. நிகழ்ச்சியின் இறுதியில் பயிலரங்க ஒருங்கிணைப்பாளரும் நிறுவன இளநிலை ஆராய்ச்சி அலுவலருமான முனைவர் த. சரவணன் நன்றி கூறினார்.

**பயிலரங்கம் 2**

## டாக்டர் எம்.ஜி.ஆர். ஜானகி மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி மாணவிகளுக்கான ஒரு நாள் பயிலரங்கம்






சென்னையிலுள்ள டாக்டர் எம்.ஜி.ஆர். ஜானகி மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி மாணவிகளுக்கான ஒரு நாள் பயிலரங்கம் 25.09.2024 அன்று செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனத்தில் நடைபெற்றது. இப்பயிலரங்கில் 60 இளங்கலை மாணவியர்கள் பங்கேற்றனர். பயிலரங்கின் தொடக்க விழாவில் நிறுவனத்தின் இயக்குநர் பேராசிரியர் இரா. சந்திரசேகரன், பதிவாளர் முனைவர் ரெ. புவனேஸ்வரி ஆகியோர் முறையே தலைமையுரையும் வாழ்த்துரையும் வழங்கினர். டாக்டர் எம்.ஜி.ஆர். ஜானகி மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரியின் தமிழ்த் துறை உதவிப் பேராசிரியர் முனைவர் சுகுமாரி சிறப்புரையாற்றினார். நிறுவன நிரலாளர்களான முனைவர் இரா. அகிலன், திரு. அ. முருகசுவாமிநாதன் ஆகியோர் முறையே வரவேற்புரையும் நன்றியுரையும் ஆற்றினர். பயிலரங்கப் பங்கேற்பாளர்களுக்கு நிறுவன நிரலாளர்களான திரு. அ. முருகசுவாமிநாதன், திரு. சு. கார்த்திகேயன், முனைவர் இரா. அகிலன், திரு. கி. கண்ணன் ஆகியோர் முறையே ‘மின்சுவடிகள் உருவாக்கம் மற்றும் செயற்கை நுண்ணறிவுத் தளங்கள்’, ‘செம்மொழித் தமிழ் இணையவழிக் கல்வி மற்றும் இ-வித்யா செம்மொழித் தமிழ்த் தொலைக்காட்சி’, ‘சங்க இலக்கியங்களுக்கான மொழித் தொழில்நுட்பக் கருவிகள்’, ‘செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனக் கூகுள் ஆண்ட்ராய்டு செயலிகள்’ ஆகிய தலைப்புகளில் கருத்துரை வழங்கினர். மேலும், மாணவியர்களுக்கு அரிதான நூல்களை மின்னாக்கம் செய்தல், சுவடிப் பாதுகாப்பு முறைகள், இணையவழிச் சுவடி தேடும் முறைகள், படப்பிடிப்பு முறைகள், தரவகக் கருவிகளைப் பயன்படுத்தும் முறைகள் குறித்து நேரடிப் பயிற்சியும் அளிக்கப்பட்டது. இப்பயிலரங்கின் ஒருங்கிணைப்பாளர்களாகத் திரு. சு. கார்த்திகேயன், முனைவர் இரா. அகிலன், திரு. அ. முருகசுவாமிநாதன், திரு. கி. கண்ணன் ஆகியோர் செயல்பட்டனர்.






**பயிலரங்கம் 3**

## கேரளப் பல்கலைக்கழக ஆய்வு மாணவர்களுக்கான ஒரு நாள் பயிலரங்கம்

கேரள மாநிலம், திருவனந்தபுரத்திலுள்ள கேரளப் பல்கலைக்கழக மொழியியல் துறையின் முதுகலை மற்றும் ஆய்வு மாணவர்களுக்கான ஒரு நாள் பயிலரங்கம் 19.11.2024 அன்று செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனத்தில் நடைபெற்றது. 30 மாணவர்கள் பங்கேற்ற இப்பயிலரங்கின் தொடக்க விழாவில் நிறுவனத்தின் இயக்குநர் பேராசிரியர் இரா. சந்திரசேகரன், பதிவாளர் முனைவர் ரெ. புவனேஸ்வரி ஆகியோர் முறையே தலைமையுரையும் வாழ்த்துரையும் வழங்கினர். கேரளப் பல்கலைக்கழக மொழியியல் துறையின் துறைத்தலைவர் முனைவர் எல். டார்வின், மொழியியல் துறையின் உதவிப் பேராசிரியர் டி.டி. ஸ்ரீஜா ஆகியோர் சிறப்புரை ஆற்றினர். நிறுவன நிரலாளர்களான முனைவர் இரா. அகிலன், திரு. சு. கார்த்திகேயன் ஆகியோர் முறையே வரவேற்புரையும் நன்றியுரையும் ஆற்றினர். பயிலரங்கப் பங்கேற்பாளர்களுக்கு நிறுவன நிரலாளர்களான முனைவர் இரா. அகிலன், திரு. சு. கார்த்திகேயன், திரு. அ. முருகசுவாமிநாதன், திரு. கி. கண்ணன் ஆகியோர் முறையே ‘தரவக உருவாக்கம் மற்றும் மொழி ஆய்விற்கான இயற்கை மொழியாய்வுக் கருவிகள்’, ‘செம்மொழித்தமிழ்ச்சான்றிதழ்கல்வி மற்றும் இ-வித்யா செம்மொழித் தமிழ்த் தொலைக்காட்சி’, ‘மின்சுவடிகள் தேடுபொறி மற்றும் செயற்கை நுண்ணறிவுத் தளங்கள் 2024’, ‘தொழில்நுட்பத்தில் முன்னணி வகிக்கும் செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனக் கூகுள் ஆண்ட்ராய்டு செயலிகள்’ ஆகிய தலைப்புகளில் கருத்துரை வழங்கினர். மேலும், ஆய்வாளர்களுக்கு அரிதான நூல்களை மின்னாக்கம் செய்தல், சுவடிப் பாதுகாப்பு முறைகள், இணையவழிச் சுவடி தேடும் முறைகள், படப்பிடிப்பு முறைகள், தரவகக் கருவிகளைப் பயன்படுத்தும் முறைகள் குறித்து நேரடிப் பயிற்சியும் அளிக்கப்பட்டது. இப்பயிலரங்கின் ஒருங்கிணைப்பாளர்களாகத் திரு. சு. கார்த்திகேயன், முனைவர் இரா. அகிலன் ஆகியோர் செயல்பட்டனர்.

**தொட்டனைத் தூறும் மணற்கேணி மாந்தர்க்குக்
கற்றனைத் தூறும் அறிவு.**

*- குறள் 396*



# கருத்தரங்குகள்



**கருத்தரங்கம் 1**

## இரட்டைக் காப்பியங்கள்: உரைகள், திறனாய்வுக் கட்டுரைகள், மொழிபெயர்ப்புகள்






தமிழில் தோன்றிய முதல் காப்பியம் என்ற சிறப்பைச் சிலப்பதிகாரம் பெறுகிறது. நெஞ்சையள்ளும் சிலப்பதிகாரம் எனப் பாரதியார் கூறுகிறார். இரட்டைக் காப்பியத்தில் கிளைக்கதைகள் மிகுந்த நூல் மணிமேகலை. இக்காப்பியம் மனித வாழ்வு செம்மை அடைவதற்கான அறநெறிகளை அடிப்படையாகக் கொண்டு பாடப்பட்டது. ஆய்வு மாணவர்களுக்கும் இளம் தலைமுறையினருக்கும் இரட்டைக் காப்பியங்கள் குறித்த முழுமையான ஆய்வுச் சிந்தனைகளைத் தூண்டும் வகையில் 'இரட்டைக் காப்பியங்கள்: உரைகள், திறனாய்வுக் கட்டுரைகள், மொழிபெயர்ப்புகள்' என்னும் இரண்டு நாள் தேசியக் கருத்தரங்கம் 07.02.2024 முதல் 08.02.2024 வரை செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனத்தில் நடைபெற்றது. நாற்பத்தாறு ஆய்வாளர்கள் பங்கேற்ற இக்கருத்தரங்கின் ஏழு அமர்வுகளிலும் துறைசார் அறிஞர்கள் ஆய்வுரை வழங்கினர்.

கருத்தரங்கின் தொடக்க விழாவில் நிறுவனத்தின் இயக்குநர் பேராசிரியர் இரா. சந்திரசேகரன், பதிவாளர் முனைவர் ரெ. புவனேஸ்வரி ஆகியோர் முறையே தலைமையுரையும் வாழ்த்துரையும் வழங்கினர். சென்னைப் பல்கலைக்கழக அரபு, பாரசீகம் மற்றும் உருதுத் துறையின் துறைத்தலைவர் முனைவர் மு.பா. அமானுல்லா சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டு தொடக்க விழாவில் சிறப்புரையாற்றினார். இக்கருத்தரங்கின் ஒருங்கிணைப்பாளராக நிறுவன ஆராய்ச்சி அலுவலர் முனைவர் கு. ஜெயகுமாரியும் இணை ஒருங்கிணைப்பாளராக இளநிலை ஆராய்ச்சி அலுவலர் முனைவர் மா. சுசிலாவும் செயல்பட்டனர்.

**கருத்தரங்கம் 2**

## திருமூலர் நாள் கருத்தரங்கம்

செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம் திருமூலரின் திருநட்சத்திர நாளான ஐப்பசி அசுவினி நட்சத்திர நாளினைத் திருமூலர் நாள் விழாவாக ஆண்டுதோறும் கொண்டாடி வருகிறது. அவ்வகையில் 14.11.2024 அன்று திருமூலர் நாள் விழாக் கருத்தரங்கம் செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனத்தில் நடைபெற்றது. இக்கருத்தரங்கில் அரசினர் சித்த மருத்துவக் கல்லூரி, சாய்ராம் சித்த மருத்துவக் கல்லூரி, வேலுமயிலு சித்த மருத்துவக் கல்லூரி ஆகியவற்றைச் சேர்ந்த 43 மாணவர்கள் கலந்துகொண்டனர்.

இக்கருத்தரங்கின் தொடக்க விழாவில் செம்மொழி நிறுவன இளநிலை ஆராய்ச்சி அலுவலர் முனைவர் த. சரவணன் வரவேற்புரை ஆற்றினார். செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவன இயக்குநர் பேராசிரியர் இரா. சந்திரசேகரன் தலைமையுரை ஆற்றினார். நிறுவனப் பதிவாளர் முனைவர் ரெ. புவனேஸ்வரி வாழ்த்துரை வழங்கினார். கோயம்புத்தூரிலுள்ள திருமூலர் சித்த யோக பீட நிறுவனர் திரு. சிவயோகி சிவராஜன்










சிறப்புரை நிகழ்த்தினார். அவ்வுரையில் அவர், ஒரு மனிதன் நீண்ட காலம் ஆரோக்கியமாக வாழ்வதற்குத் தேவையான அனைத்து இரகசியங்களையும் திருமூலர் தமது திருமந்திரத்தில் எழுதி வைத்துள்ளார். சித்த மருத்துவத்தைப் பின்பற்றுபவர்கள் திருமந்திரத்தை முழுமையாகப் படித்திருக்க வேண்டும் என்று குறிப்பிட்டார். தொடக்க விழாவின் இறுதியாகச் செம்மொழி நிறுவன ஆராய்ச்சி அலுவலர் முனைவர் இரா. அருள்மணி நன்றியுரை ஆற்றினார். கருத்தரங்கின் முதல் அமர்வில் திரு. சிவயோகி சிவராஜன் 'திருமந்திரத்தில் சிவயோகமும் சித்த மருத்துவமும்' என்னும் தலைப்பில் உரையாற்றினார். இரண்டாம் மூன்றாம் அமர்வுகளில் மருத்துவர் ப. செல்வசண்முகம் 'திருமந்திரத்தில் அட்டாங்க யோகம்', 'யோகமும் தியானமும் - செயல்முறை விளக்கப்பயிற்சி' என்னும் தலைப்புகளில் உரையாற்றினார்.

### கருத்தரங்கம் 3

## அகத்தியர் நாள் கருத்தரங்கம்

அகத்தியரின் பிறந்த நாளான மார்கழி ஆயில்ய நட்சத்திரம் அன்று ஆண்டு தோறும் அகத்தியர் நாளாகவும் தேசியச் சித்த மருத்துவ நாளாகவும் கொண்டாடப்பட்டு வருகிறது. அவ்வகையில் 19.12.2024 அன்று அகத்தியர் நாள் விழாக் கருத்தரங்கம் செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனத்தில் நடைபெற்றது. இக்கருத்தரங்கில் திருப்பெரும்புதூரில் உள்ள வேலுமயிலு சித்த மருத்துவக் கல்லூரி, தாம்பரம் சானடோரியத்தில் உள்ள தேசியச் சித்த மருத்துவ நிறுவனம் ஆகியவற்றில் பயிலும் 55 மாணவர்கள் பங்கேற்றனர்.

இக்கருத்தரங்கின் தொடக்க விழாவில் செம்மொழி நிறுவன இளநிலை ஆராய்ச்சி அலுவலர் முனைவர் த. சரவணன் வரவேற்புரை ஆற்றினார். செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவன இயக்குநர் பேராசிரியர் இரா. சந்திரசேகரன் தலைமையுரை ஆற்றினார். செம்மொழி நிறுவனப் பதிவாளர் ரெ. புவனேஸ்வரி அறிமுகவுரை நிகழ்த்தினார். செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனத் துணைத்தலைவர் மருத்துவர் பேராசிரியர் சுதா சேஷய்யன் வாழ்த்துரை வழங்கினார். அவ்வுரையில் அவர், அகத்தியர் ஒருவரா பலரா என்றும் அகத்தியர் எந்தக் காலத்தில் வாழ்ந்தார் என்பது குறித்தும் ஆராய்ச்சி மேற்கொண்டிருந்தால் அவற்றால் பலன் ஏதும் ஏற்படப் போவதில்லை. அகத்தியர் இயற்றிய நூல்களில் உள்ள கருத்துகளில் கவனம் செலுத்துவதே சமூகத்துக்குப் பயனுடையதாக இருக்கும் என்றார்.

சென்னைப் பச்சையப்பன் கல்லூரியின் மேனாள் தமிழ்ப் பேராசிரியர் மருத்துவர் இரா. மாணிக்கவாசகம் சிறப்புரையாற்றினார். அவ்வுரையில் அவர், சித்தர்கள் யார் என்பது குறித்தும் அகத்தியர் சித்த மருத்துவத் துறைக்கு ஆற்றிய பங்களிப்புகள் குறித்தும் குறிப்பிட்டுப் பேசினார். தொடக்க விழாவின் இறுதியில் செம்மொழி நிறுவன ஆராய்ச்சி அலுவலர் முனைவர் இரா. அருள்மணி நன்றி நவின்றார். கருத்தரங்கின் முதல் அமர்வில் சுதா சேஷய்யன், 'அகத்தியரின் அறிவியல் பார்வை' என்ற தலைப்பிலும் இரண்டாம் அமர்வில் திருவனந்தபுரத்தில் உள்ள ஐந்திரம் சித்த மருத்துவமனை மருத்துவர் மு. அருண், 'அகத்தியரின் மருத்துவப் பார்வை' என்னும் தலைப்பிலும் மூன்றாம் அமர்வில் சென்னை அரும்பாக்கத்தில் உள்ள துவாரகதாஸ் கோவர்தன்தாஸ் வைணவக் கல்லூரித் தமிழ்ப் பேராசிரியர் சி. சதானந்தன், 'அகத்தியரின் இலக்கியப் பார்வை' என்னும் தலைப்பிலும் உரைநிகழ்த்தினர்.

# கலைஞர் மு.கருணாநிதி செம்மொழித் தமிழ் விருது




செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனத்தால் வழங்கப்படும் 2024ஆம் ஆண்டிற்கான கலைஞர் மு. கருணாநிதி செம்மொழித் தமிழ் விருதினை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்கள் முனைவர் மா. செல்வராசன் அவர்களுக்கு 08.11.2024 அன்று வழங்கிச் சிறப்பித்தார். இந்நிகழ்வில் மாண்புமிகு தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் திரு. மு.பெ. சாமிநாதன், தலைமைச் செயலாளர் திரு. நா. முருகானந்தம், இ.ஆ.ப., தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறைச் செயலாளர் திரு. வே. ராஜாராமன், இ.ஆ.ப., தமிழ் வளர்ச்சித் துறை இயக்குநர் முனைவர் ஔவை. ந. அருள், செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனத் துணைத்தலைவர் பேராசிரியர் மருத்துவர் சுதா சேஷய்யன், இயக்குநர் பேராசிரியர் இரா. சந்திரசேகரன், பதிவாளர் முனைவர் ரெ. புவனேஸ்வரி ஆகியோர் கலந்துகொண்டனர்.

## ஆய்வு உதவித்தொகைகள்

செம்மொழித் தமிழ் நூல்கள் நாற்பத்தொன்றை அடிப்படையாகக் கொண்டு ஆய்வு மேற்கொள்ளும் முனைவர் பட்ட ஆய்வாளர்களுக்கும் முனைவர் பட்ட மேலாய்வாளர்களுக்கும் செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம் உதவித்தொகைகள் வழங்கி அவர்களை ஊக்கப்படுத்தி வருகின்றது. அதன்படி 2024ஆம் ஆண்டு பின்வரும் முனைவர் பட்ட மேலாய்வாளர் ஒருவரும் முனைவர் பட்ட ஆய்வாளர்கள் பதினைந்து பேரும் நேர்காணல் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

### முனைவர் பட்ட மேலாய்வாளர்

1. முனைவர் ப. பிரதாப்

### முனைவர் பட்ட ஆய்வாளர்கள்

1. ர. நிவேதா
2. அ. சகாய சுசி
3. க. விபின்
4. பா. அவந்திகா பாலா
5. ந. வாசு
6. பா. கண்ணம்மாள்
7. உ. இராஜீவ்காந்தி
8. க. பிரவீன்குமார்
9. ச. கோவிந்தராஜ்
10. இரா. ரெங்கராஜ்
11. ஆ. கார்த்திக்
12. அ. ஆர்த்தி
13. ச. இளஞ்செழியன்
14. சி. ஜனனி
15. மை. அப்துல் ஹாதி

# அலைபேசிச் செயலிகள்

## செம்மொழித் தமிழ் ஒலி நூல்கள் செயலி

செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம் ‘செம்மொழித் தமிழ் ஒலி நூல்கள்’ என்ற ஆண்ட்ராய்டு செயலியை உருவாக்கிக் கூகுள் பிளே ஸ்டோரில் தமிழியல் ஆய்வு மாணவர்கள், ஆர்வலர்கள், குறிப்பாகப் பார்வை மாற்றுத்திறனாளிகள் ஆகியோரின் பயன்பாட்டிற்காக வெளியிட்டுள்ளது. செயற்கை நுண்ணறிவுத் தொழில்நுட்ப உதவியுடன் உருவாக்கப்பட்ட இச்செயலியில் 41 செவ்வியல் தமிழ் நூல்களும் ஒலி நூல்களாக மாற்றப்பட்டு 200 மணி நேரத்திற்கும் மேலான உள்ளடக்கத்தைக் கொண்டுள்ளன. இச்செயலியை நிறுவன இயக்குநர் பேராசிரியர் இரா. சந்திரசேகரன் அவர்களின் வழிகாட்டுதலில், நிறுவன இளநிலை ஆய்வு வளமையர் திரு. கி. கண்ணன் வடிவமைத்துள்ளார்.

https://play.google.com/store/apps/details?id=com.cict.chemmozhiaudiobooks



## திருக்குறள் முற்றோதல் செயலி

செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம் ‘திருக்குறள் முற்றோதல்’ என்ற ஆண்ட்ராய்டு செயலியை உருவாக்கிக் கூகுள் பிளே ஸ்டோரில் மக்கள் பயன்பாட்டிற்காக வெளியிட்டுள்ளது. இச்செயலியில் திருக்குறளின் அறத்துப்பால், பொருட்பால், காமத்துப்பால் ஆகியவற்றிலுள்ள 1330 குறட்பாக்களும் முற்றோதல்வழி ஒலி வடிவில் அமைக்கப்பட்டுள்ளன. திருக்குறளைப் பாராயணம் செய்ய முயலும் மாணவர்களுக்கு இச்செயலி மிகவும் பயனளிக்கும். இச்செயலியை நிறுவன இயக்குநர் பேராசிரியர் இரா. சந்திரசேகரன் அவர்களின் வழிகாட்டுதலில், நிறுவன இளநிலை ஆய்வு வளமையர் திரு. கி. கண்ணன் வடிவமைத்துள்ளார்.

https://play.google.com/store/apps/details?id=com.cict.recitation_of_entire_Tirukkural



## மணிமேகலை ஆங்கில மொழிபெயர்ப்புச் செயலி

செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம் 'மணிமேகலை ஆங்கில மொழிபெயர்ப்பு' என்ற ஆண்ட்ராய்டு செயலியை உருவாக்கிக் கூகுள் பிளே ஸ்டோரில் மக்கள் பயன்பாட்டிற்காக வெளியிட்டுள்ளது. இச்செயலியில் மூலத் தமிழ்ப் பனுவல், அதன் ஒலிபெயர்ப்பு, கவிதையிலும் உரைநடையிலும் அமைந்த மூன்று மொழிபெயர்ப்புகள் ஆகியன இடம்பெற்றுள்ளன. இச்செயலியை நிறுவன இயக்குநர் பேராசிரியர் இரா. சந்திரசேகரன் அவர்களின் வழிகாட்டுதலில், நிறுவன நிரலாளர் திரு. அ. முருகசுவாமிநாதன் வடிவமைத்துள்ளார்.

https://play.google.com/store/apps/details?id=com.cict.manimekalai



## பரிபாடல் முற்றோதல் செயலி

செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம் ‘பரிபாடல் முற்றோதல்’ என்ற ஆண்ட்ராய்டு செயலியை உருவாக்கிக் கூகுள் பிளே ஸ்டோரில் மக்கள் பயன்பாட்டிற்காக வெளியிட்டுள்ளது. இச்சயெலியில் பரிபாடலின் பாடல்கள் அனைத்தும் முற்றோதல்வழி ஒலி வடிவில் அமைக்கப்பட்டுள்ளன. இச்செயலியை நிறுவன இயக்குநர் பேராசிரியர் இரா. சந்திரசேகரன் அவர்களின் வழிகாட்டுதலில், நிறுவன இளநிலை ஆய்வு வளமையர் திரு. கி. கண்ணன் வடிவமைத்துள்ளார்.

https://play.google.com/store/apps/details?id=com.cict.recitation_of_entire_Tirukkural



## நானாற்பது ஆங்கில மொழிபெயர்ப்புச் செயலி

செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம் ‘நானாற்பது’ என்ற ஆண்ட்ராய்டு செயலியை உருவாக்கிக் கூகுள் பிளே ஸ்டோரில் மக்கள் பயன்பாட்டிற்காக வெளியிட்டுள்ளது. இச்செயலியில் இன்னா நாற்பது, இனியவை நாற்பது, கார் நாற்பது, களவழி நாற்பது ஆகிய நான்கு நூல்களின் மூலத் தமிழ்ப் பனுவல், அதன் ஒலிபெயர்ப்பு, கவிதையிலும் உரைநடையிலும் அமைந்த மூன்று மொழிபெயர்ப்புகள் ஆகியன இடம்பெற்றுள்ளன. இச்செயலியை நிறுவன இயக்குநர் பேராசிரியர் இரா. சந்திரசேகரன் அவர்களின் வழிகாட்டுதலில், நிறுவன நிரலாளர் திரு. அ. முருகசுவாமிநாதன் வடிவமைத்துள்ளார்.

https://play.google.com/store/apps/details?id=com.cict.nanarpathu&pcampaignid=web_share



## பத்துப்பாட்டு முற்றோதல் செயலி

செம்மொழித்தமிழாய்வுமத்தியநிறுவனம்'பத்துப்பாட்டுமுற்றோதல்' என்றஆண்ட்ராய்டுசெயலியை உருவாக்கிக் கூகுள் பிளே ஸ்டோரில் மக்கள் பயன்பாட்டிற்காக வெளியிட்டுள்ளது. இச்செயலியில் பத்துப்பாட்டின் பாடல்கள் அனைத்தும் முற்றோதல்வழி ஒலி வடிவில் அமைக்கப்பட்டுள்ளன. இச்செயலியை நிறுவன இயக்குநர் பேராசிரியர் இரா. சந்திரசேகரன் அவர்களின் வழிகாட்டுதலில், நிறுவன இளநிலை ஆய்வு வளமையர் திரு. கி. கண்ணன் வடிவமைத்துள்ளார்.

https://play.google.com/store/apps/details?id=com.cict.recitation_of_entire_Tirukkural



# புத்தகக் காட்சிகள்

## 1. சென்னைப் புத்தகக் காட்சி




நாற்பத்தேழாவது சென்னைப் புத்தகக் காட்சி 03.01.2024 முதல் 21.01.2024 வரை நந்தனம் ஒய்.எம்.சி.ஏ. உடற்கல்வியியல் கல்லூரி வளாகத்தில் நடைபெற்றது. இப்புத்தகக் காட்சியில் நிறுவன அரங்குகளை (எண் 440, 441) இயக்குநர், பேராசிரியர் இரா. சந்திரசேகரன் அவர்கள் திறந்துவைத்தார். புத்தகக் காட்சியில் நூல் விற்பனைப் பொறுப்பாளர்களாக நிறுவன இளநிலை ஆராய்ச்சி அலுவலர் முனைவர் சே. கரும்பாயிரம், தரவு உள்ளீட்டாளர் திரு. சோ. சரவணன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

## 2. ஈரோடு புத்தகத் திருவிழா

ஈரோடு புத்தகத் திருவிழா 02.08.2024 முதல் 13.08.2024 வரை ஈரோடு சிக்கய்ய நாயக்கர் கல்லூரி வளாகத்தில் நடைபெற்றது. இத்திருவிழாவில் செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவன இயக்குநர், பேராசிரியர் இரா. சந்திரசேகரன் அவர்கள் நிறுவன அரங்குகளைத் (எண் 144, 145) திறந்துவைத்து, நிறுவனத்தின் 1. சிலப்பதிகாரத்தில் ஆடல் அரங்கேற்ற நுட்பங்கள், 2. சிலப்பதிகாரக் களஞ்சியம், 3. தமிழின் தொன்மை: உலக மொழியியலார் பார்வையில், 4. தொல்காப்பியச் செய்தி, 5. பெருங்கதை (சொல்லடைவு), 6. சீவகசிந்தாமணி (சொல்லடைவு), 7. தமிழ் வழக்காற்றுச் சொற்கள் - களப்பணிப் பொது வினாநிரல், 8. தமிழ்ச் செவ்விலக்கியங்களில் விலங்கினைச்




சொற்கள்: சிறப்பகராதி (சொல்லடைவு, தொடரடைவு, அகராதி), 9. பள்ளிப்பட்டு இருளர் பழங்குடியின மக்களின் வட்டார வழக்குச் சொல்லகராதி, 10. சங்க இலக்கியத்தில் குறிஞ்சித் திணைப் பாடல்கள் (பகுப்பாய்வு அணுகுமுறை), 11. கைந்நிலை ஆகிய நூல்களை வெளியிட்டுச் சிறப்பித்தார்கள். புத்தகக் காட்சியில் நூல் விற்பனைப் பொறுப்பாளர்களாக நிறுவன இளநிலை ஆராய்ச்சி அலுவலர் முனைவர் சே. கரும்பாயிரம், இளநிலை எழுத்தர் திரு. அ. முருகேசன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

## 3. சென்னைப் புத்தகக் காட்சி

நாற்பத்தெட்டாவது சென்னைப் புத்தகக் காட்சி 27.12.2024 முதல் 12.01.2025 வரை நந்தனம் ஒய்.எம்.சி.ஏ. உடற்கல்வியியல் கல்லூரி வளாகத்தில் நடைபெற்றது. இப்புத்தகக் காட்சியில் நிறுவன அரங்குகளை (எண் 161, 162) இயக்குநர், பேராசிரியர் இரா. சந்திரசேகரன் அவர்கள் திறந்துவைத்தார். புத்தகக் காட்சியில் நூல் விற்பனைப் பொறுப்பாளர்களாக நிறுவன இளநிலை ஆராய்ச்சி அலுவலர் முனைவர் சே. கரும்பாயிரம், இளநிலை எழுத்தர் திரு. அ. முருகேசன் ஆகியோர் கலந்துகொண்டனர்.



# நிறுவன விழாக்கள்




*செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனத்தில் 11.01.2024 அன்று பொங்கல் விழா கொண்டாடப்பட்டது. இவ்விழாவில் நிறுவனத் துணைத்தலைவர் பேராசிரியர் இ. சுந்தரமூர்த்தி, இயக்குநர் பேராசிரியர் இரா. சந்திரசேகரன், பதிவாளர் முனைவர் ரெ. புவனேஸ்வரி, நிதி அலுவலர் திரு.ஆ. குமரேசன், நிறுவனப் பணியாளர்கள் அனைவரும் கலந்துகொண்டனர்.*




















செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனத்தில் 26.01.2024 அன்று நாட்டின் 75ஆவது இந்தியக் குடியரசு நாளையொட்டி நடைபெற்ற விழாவில் நிறுவன இயக்குநர் பேராசிரியர் இரா. சந்திரசேகரன் அவர்கள் தேசியக் கொடியை ஏற்றிவைத்துச் சிறப்புரையாற்றினார். இவ்விழாவில் நிறுவனப் பணியாளர்கள் அனைவரும் கலந்துகொண்டனர்.





பாரத மொழிகளின் திருவிழாவின் ஒரு பகுதியாகச் செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம் பள்ளி மாணவர்களுக்கான ஓவியப் போட்டியையும், கல்லூரி மாணவர்களுக்கான கட்டுரைப் போட்டியையும் (அறிவிப்பு நாள்: 03.11.2023) நடத்தியது. ஓவியப் போட்டியின் மூன்று பிரிவுகளிலும் வெற்றிபெற்ற பள்ளி மாணவர்கள் இருபத்துநான்கு பேருக்கும், கட்டுரைப் போட்டியின் இரண்டு பிரிவுகளிலும் வெற்றிபெற்ற கல்லூரி மாணவர்கள் பதினாறு பேருக்கும் குடியரசு நாள் விழாவில் பரிசுகள் வழங்கப்பட்டன.





















செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனத்தில் *21.02.2024* அன்று உலகத் தாய்மொழி நாள் விழா நடைபெற்றது. இவ்விழாவில் நிறுவன இயக்குநர் பேராசிரியர் இரா. சந்திரசேகரன் தலைமையுரையும், பதிவாளர் முனைவர் ரெ. புவனேஸ்வரி வாழ்த்துரையும் வழங்கினர். பிரான்சு, பிரெஞ்சு தேசிய அறிவியல் ஆராய்ச்சி மைய ஆராய்ச்சியாளர் முனைவர் ழான் லூய்க் செவ்வியார், செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவன மேனாள் ஆய்வறிஞர் பேராசிரியர் ப. மருதநாயகம் ஆகியோர் சிறப்புரை ஆற்றினர். விழாவில் நிறுவனப் பணியாளர்கள் அனைவரும் கலந்துகொண்டனர்.













# உலக மகளிர் நாள் விழா




செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனத்தில் 08.03.2024 அன்று நடைபெற்ற உலக மகளிர் நாள் விழாவில் நிறுவன இயக்குநர் பேராசிரியர் இரா. சந்திரசேகரன் தலைமையுரை ஆற்றினார். பதிவாளர் முனைவர் ரெ. புவனேஸ்வரி அவர்களும், நிதி அலுவலர் திரு. ஆ. குமரேசன் அவர்களும் வாழ்த்துரை வழங்கிச் சிறப்பித்தனர். இவ்விழாவில் நிறுவனப் பணியாளர்கள் அனைவரும் கலந்துகொண்டனர்.














# உலகச் சுற்றுச்சூழல் நாள் விழா

செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனத்தில் 05.06.2024 அன்று உலகச் சுற்றுச்சூழல் நாள் விழா கொண்டாடப்பட்டது. இவ்விழாவில் இயக்குநர் பேராசிரியர் இரா. சந்திரசேகரன், பதிவாளர் முனைவர் ரெ. புவனேஸ்வரி, நிறுவனப் பணியாளர்கள் அனைவரும் கலந்துகொண்டு நிறுவன வளாகத்தில் மரக்கன்றுகளை நட்டனர்.

















செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனத்தில் 21.06.2024 அன்று பத்தாவது பன்னாட்டு யோகா நாள் விழா நடைபெற்றது. இவ்விழாவில் நிறுவன இயக்குநர் பேராசிரியர் இரா. சந்திரசேகரன் தலைமையுரை ஆற்றினார். பதிவாளர் முனைவர் ரெ. புவனேஸ்வரி வாழ்த்துரை வழங்கினார். சித்த மருத்துவர் முனைவர் ப. செல்வசண்முகம் சிறப்புரையாற்றினார். யோகா ஆசிரியர் முனைவர் மா. முருகேசன் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டு நிறுவனப் பணியாளர்களுக்கு யோகாசனப் பயிற்சியளித்தார்.














செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனத்தில் 15.08.2024 அன்று நாட்டின் 78ஆவது விடுதலைத் திருநாளையொட்டி நடைபெற்ற விழாவில் நிறுவன இயக்குநர் பேராசிரியர் இரா. சந்திரசேகரன் அவர்கள் தேசியக் கொடியை ஏற்றிவைத்து மரியாதை செலுத்தித் தலைமையுரை ஆற்றினார். நிறுவனப் பதிவாளர் முனைவர் ரெ. புவனேஸ்வரி வாழ்த்துரை வழங்கினார். நிறுவனப் பணியாளர்கள் அனைவரும் இவ்விழாவில் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.










# 2024ஆம் ஆண்டில் வெளியிடப்பெற்ற நூல்கள்

1. சிலப்பதிகாரத்தில் ஆடல் அரங்கேற்ற நுட்பங்கள்
2. சிலப்பதிகாரக் களஞ்சியம்
3. தொல்காப்பியச் செய்தி
4. பெருங்கதை (சொல்லடைவு)
5. சீவகசிந்தாமணி (சொல்லடைவு)
6. தமிழ் வழக்காற்றுச் சொற்கள் - களப்பணிப் பொது வினாநிரல்
7. தமிழ்ச் செவ்விலக்கியங்களில் விலங்கினச் சொற்கள்: சிறப்பகராதி (சொல்லடைவு, தொடரடைவு, அகராதி)
8. பள்ளிப்பட்டு இருளர் பழங்குடியின மக்களின் வட்டார வழக்குச் சொல்லகராதி
9. சங்க இலக்கியத்தில் குறிஞ்சித் திணைப் பாடல்கள் (பகுப்பாய்வு அணுகுமுறை)
10. கைந்நிலை
11. தமிழ்நாட்டுச் சமண ஓவியங்கள்
12. சிலப்பதிகாரம் - மலையாளம்
13. ஐங்குறுநூறு - மலையாளம்
14. தொல்காப்பியம் - கன்னடம்































# பணிக்குழாம்

**இயக்குநர்**

**பேராசிரியர் இரா. சந்திரசேகரன்**

**பதிவாளர்**

**முனைவர் ரெ. புவனேஸ்வரி**

**நிதி அலுவலர்**

**திரு. ஆ. குமரேசன்**

---

*ஆராய்ச்சி அலுவலர்கள்*

முனைவர் கூ.மு. புவனேஸ்வரி

முனைவர் ந. தேவி

முனைவர் இரா. அருள்மணி

முனைவர் கு. ஜெயகுமாரி

*இளநிலை ஆராய்ச்சி அலுவலர்கள்*

முனைவர் க. கமலா ஏஞ்சல் பிரைட்

முனைவர் சு. ஏழுமலை

முனைவர் மு. செல்வதுரை

முனைவர் சே. கரும்பாயிரம்

முனைவர் த. சரவணன்

முனைவர் இரா. வெங்கடேசன்

முனைவர் ந. பெரியசாமி

முனைவர் வ. மாரியப்பன்

முனைவர் ம. தமிழ்வாணன்

முனைவர் அ. ஆரோக்கியதாசு

முனைவர் மா. சுசிலா

முனைவர் ப. கண்ணதாசன்

முனைவர் சுப. வேல்முருகன்

முனைவர் வே. அழகுமுத்து

முனைவர் ம. நாகராஜன்

முனைவர் சி. இராமச்சந்திரன்

*இளநிலை ஆய்வு வளமையர்கள்*

திருமதி ம. தாமரைச்செல்வி *(ஜூன் 2024 வரை)*

திரு. து.ச.ரா. ராஜேஷ்குமார்

திரு. கி. கண்ணன்

திரு. கோ. சந்திரசேகர்

*தொழில்நுட்பப் பணியாளர்கள்*

திரு. சு. கார்த்திகேயன் *(நிரலாளர்)*

திரு. த. செந்தில்குமார் *(நிரலாளர்)*

முனைவர் இரா. அகிலன் *(நிரலாளர்)*

திரு. அ. முருக சுவாமிநாதன் *(நிரலாளர்)*

திரு. இரா. சுந்தரகணபதி *(கணினி நிருவகிப்பாளர்)*

திரு. மு. இராசசேகர் *(இணையத்தள வடிவமைப்பாளர்)*

*நிருவாகப் பணியாளர்கள்*

திரு. கோ. புண்ணியமூர்த்தி *(ஜூன் 2024 வரை)*
*(அலுவலகக் கண்காணிப்பாளர்)*

திரு. ஜா.வா. பாஸ்கரன் *(மே 2024 வரை)*
*(இளநிலைக் கணக்கு அலுவலர்)*

திரு. மோ. முருகானந்தம் *(முதுநிலை எழுத்தர்)*

திரு. க. சங்கர் *(இளநிலை எழுத்தர்)*

திரு. அ. முருகேசன் *(இளநிலை எழுத்தர்)*

திருமதி இர. நளினா *(இளநிலை எழுத்தர்)*

*தரவு உள்ளீட்டாளர்கள்*

திரு. வெ. சிவப்பிரகாசம்

திருமதி சு. கீதா

திரு. தி.ஞா. அருள்ஒளி

திரு. மு. முனியசாமி

திரு. சோ. சரவணன்

*அனுப்புகை உதவியாளர்*

திரு. ம. கோவிந்தன்

*பன்னோக்கு உதவியாளர்கள்*

திருமதி ந. ஜெயலட்சுமி

திருமதி சி. அன்னபூரணி

**தொல்காப்பியம்**

**எட்டுத்தொகை**

- நற்றிணை
- குறுந்தொகை
- ஐங்குறுநூறு
- பதிற்றுப்பத்து
- பரிபாடல்
- கலித்தொகை
- அகநானூறு
- புறநானூறு

**பத்துப்பாட்டு**

- திருமுருகாற்றுப்படை
- பொருநராற்றுப்படை
- சிறுபாணாற்றுப்படை
- பெரும்பாணாற்றுப்படை
- முல்லைப்பாட்டு
- மதுரைக்காஞ்சி
- நெடுநல்வாடை
- குறிஞ்சிப்பாட்டு
- பட்டினப்பாலை
- மலைபடுகடாம்

**பதினெண் கீழ்க்கணக்கு**

- நாலடியார்
- நான்மணிக்கடிகை
- இன்னா நாற்பது
- இனியவை நாற்பது
- கார் நாற்பது
- களவழி நாற்பது
- ஐந்திணை ஐம்பது
- ஐந்திணை எழுபது
- திணைமொழி ஐம்பது
- திணைமாலை நூற்றைம்பது
- பழமொழி நானூறு
- சிறுபஞ்சமூலம்
- திருக்குறள்
- திரிகடுகம்
- ஆசாரக்கோவை
- முதுமொழிக்காஞ்சி
- ஏலாதி
- கைந்நிலை

**சிலப்பதிகாரம்**

**மணிமேகலை**

**முத்தொள்ளாயிரம்**

**இறையனார் களவியல்**